# ப்ரார்த்தனா

Savitri
B H A V A N

ஆய்வுக் குறிப்புக்கள் எண். 22

ப்ரார்த்தனா அச்சிட்டு வெளியிடுபவர் : சாவித்ரி பவன், ஆரோவில்

**சாவித்ரி பவன்**
ஆரோவில் 605 101
தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி: 0091 (0)413 2622922
மின்அஞ்சல்: savitribhavan@auroville.org.in
www.auroville.org/index/savitribhavan.htm

இவ்வெளியீடு ஸ்ரீஅரபிந்தோ பன்னாட்டு கல்வி ஆராய்ச்சி மையத்தின் (*SAIIER*) நிதியுதவியினால் பிரசுரிக்கப்படுகிறது.

*This publication has been funded by SAIIER*
*(Sri Aurobindo International Institute of Educational Research)*

இப்புத்தகத்தில் வெளியிடப்பட்டுள்ள புகைப்படங்கள், ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை ஆகியோரின் வாசகங்களை மறுபதிப்பு செய்ய அனுமதித்த ஸ்ரீ அரபிந்தோ ஆசிரம அறக்கட்டளை மற்றும் அறங்காவலர் ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றி

ஆங்கில இதழாசிரியர் ஷ்ரத்தாவன்
தமிழில் தனலட்சுமி, சாவித்ரி பவனுக்காக

வடிவமைப்பு : ப்ரிஸ்மா, ஆரோவில், prisma@auroville.org.in
அச்சிட்டோர் : ஆரோவில் பிரஸ், ஆரோவில்

ஆகஸ்ட் 2014

# பொருளடக்கம்

ஸ்ரீ அரவிந்தரின் பிள்ளைக் கவி ........................................................ 4
பிரேமா நந்தகுமார்

சாவித்ரி - பன்முகச்சித்திரம் - 2 ........................................................ 14
சு. புவனசுந்தரி, ஆரோவில்


சாவித்ரி விளக்கம் ........................................................ 30
ஷ்ரத்தாவன்

சாவித்ரிபவன் செய்திகள் ........................................................ 50

*In the unfolding process of the Self*
*Sometimes the inexpressible Mystery*
*Elects a human vessel of descent.*
*A breath comes down from a supernal air,*
*A Presence is born, a guiding Light awakes,*
*A stillness falls upon the instruments:*
*Fixed, motionless like a marble monument,*
*Stone-calm, the body is a pedestal*
*Supporting a figure of eternal Peace.*

*Bk.I C.IV l.45-53*

**அண்டமா அவனியின் அகத்துரு ஆங்கே**
**மடல்தான் அவிழ்க்கும் வழிமுறை தனிலே,**
**விரித்தெஞ் ஞான்றும் விளக்கிட இயலாப்**
**புதிர்நிலைப் பொருண்மை சிலவே ளைகளில்**
**இறங்கி வந்தருள் தருவதை ஏற்பதோர்**
**மனிதப் பாத்திரம் தனையே வாகாய்த்**
**தெரிவுதான் செய்து தேர்ந்தெடுக் கின்றதே.**
**வான்வெளி சார்ந்தவோர் வளியினின்றொரு**
**மென்மைச் சுவாசம் வந்திறங் கிடுதே;**
**உளதாந் தன்மையின் உணர்வொன்(று) உதிக்குதே;**
**வழிதான் காட்டிடும் ஒளியுமிழ் விளக்கம்**
**விழிப்புறு கின்றதே; கருவிகள் மேலொரு**
**அசைவிலா நிலைமை அமைவுறு கின்றதே:**
**சலவைக் கல்லினால் சமைக்கப் பட்டவோர்**
**நிற்கிற நிலையுள நினைவுச் சிலைபோல்**
**நிலையாய் உளதாய், இயக்கம் இலதாய்,**
**பாறைத் திண்மைப் பாங்குடை அமைதியாய்,**
**நிலைபே(று) உடையதோர் நிர்மல மோனத்(து)**
**உருவினுக்(கு) உதைகால் கொடுத்திடும் வகையதோர்**
**பீடப் பிழம்பெனப் புற்கலன் ஆகுதே.**



# ஸ்ரீ அரவிந்தரின் பிள்ளைக் கவி

பிரேமா நந்தகுமார்

வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் இவை மானுடம் மேன்மை பெறுவதற்கு சிறந்த பொருள்களை உள்ளடக்கியுள்ளன. வீரம், தயை, தன்மானம், கற்பு என்று பல விஷயங்களைச் சொல்லவரும் போது இத்தன்மைகளுக்கு நம்மால் புரிந்து கொள்ளக்கூடிய உருவகங்களைக் கொடுக்கின்றன. அந்நிலையில் தோன்றியவர்களே நமது காப்பியத் தலைவர்கள் மற்றும் காப்பியத் தலைவிகள், மறக்க முடியாதவர்கள், நம் வாழ்வினைச் செம்மைப்படுத்தும் ஒளியாகத் திகழ்பவர்கள்.

ஆனால் இவர்களது குழந்தைப் பருவம் பற்றி நமக்கு வர்ணனைகள் இல்லை. விசுவாமித்திரர் தசரதனைக் காண வருகிறார். அப்பொழுது தசரதனால் அழைக்கப்பட்டு திருவோலக்கத்திற்குள் இராமன் நுழையும் போது அவனுக்கு வயது பதினாறு. இச்சிறுவனை விசுவாமித்திரருடன் அனுப்புவதற்கு தசரதன் தயங்குகிறார். இங்கு நாம் இராமனை வில்வித்தையில் தேர்ந்த இளைஞனாகக் காண்கிறோம். மகாபாரதத்தில் கண்ணனைப் பார்க்கும் போது அவன் துவாரகையின் தலைவனாகி விட்டவன், காவியத்தலைவிகளும் அப்படியே.

முதன் முதலில் கண்ணனைக் குழந்தையாகப் பார்த்தது பெரியாழ்வார்தான். எங்கும் நிறைந்த இறைவனை, எல்லாம் வல்ல கடவுளைத் தொட்டிலில் இட்டு சீராட்டியது அவரே. அவரது கண்ணன் சப்பாணி கொட்டுவான், தவழ்ந்து வருவான், செங்கீரை ஆடுவான், பசுக்களை மேய்ப்பான். அன்றிலிருந்து இன்று வரை தமிழிலக்கியத்தில் பிரத்தியேகமான பிள்ளைத் தமிழ்க் கவிதை மிகச் சிறப்பாக வளர்ந்து வந்திருக்கிறது. மேலும் பெரியாழ்வாருக்குப் பின் அனைத்து பக்தர்களும் பாடல் புனைபவர்களும் இறைவனைக் குழந்தையாக பாவிப்பது வழக்கமாகிவிட்டது. சென்ற நூற்றாண்டில் சுப்பிரமணிய பாரதியார் பாடிய கண்ணன் பாட்டு மிகவும் பிரசித்தம். நூலில் கண்ணனின் பிள்ளைப் பருவம் பற்றி எழுதிய "சின்னஞ்சிறு கிளியே" பாடலை அறியாதவர்கள் இல்லை. கண்ணனைப் பெண் குழந்தையாகவும் அவர் காண்பது ஒரு தனிச் சிறப்பு.

இன்பக்கதைக ளெல்லாம் - உன்னைப்போல்
ஏடுகள் சொல்வதுண்டோ?
அன்பு தருவதிலே ___ உனைநேர்
ஆகுமோர் தெய்வ முண்டோ?

தெய்வத்தையும், தெய்வீக மனிதர்களையும் குழந்தையாகக் கண்டு மகிழும் சாவித்திரி மகாகாவியம் ஆங்கில இலக்கியத்திற்கு கிடைத்த பொக்கிஷம். ஸ்ரீஅரவிந்தர் பாடும் பிள்ளைக் கவியை சற்று நேரம் படித்து மகிழ்வோம்.

என்ன தவம் செய்தனை யசோதா எங்கும் நிறை பரப்பிரும்மம் உனக்கு மகவாகப் பிறந்தான் என்று பக்தர் பாடுகிறார். சாவித்திரியும் அப்படித்தான். அசுவபதி மகாராஜா செய்த அரும்பெரும் தவத்தின் பலனாகத் தோன்றிய பெண். இத்தவம் சாமானியமானதல்ல என்று வியாச மகாபாரதத்தைப் படிக்கும்போது தெரிகிறது. ஒருமுனைப்பாட்டுடன் அசுவபதி கடினமான நியமங்களை ஏற்கிறான். பதினெட்டு ஆண்டுகள் முடிவில் சாவித்திரி தேவதை தோன்றி வரம் அளிக்கிறாள். "நல்ல தேஜஸுள்ள ஒரு கன்னிகையானவள் சீக்கிரமாகவே உண்டாவாள்". வியாசர் சாவித்திரியின் குழந்தைப் பருவம் பற்றி ஏதும் சொல்லவில்லை.

"அந்த ராஜபுத்திரியானவள் லக்ஷ்மி தேவியே வடிவெடுத்து வந்தது போல வளர்ந்து வந்தாள். சிறிது காலத்தில் அந்தக் கன்னிகையானவள் யௌவனப் பருவத்தை அடைந்தவளானாள்." வியாசருக்குப்பின் வந்த பக்தியுகத்தில் பெரியாழ்வாரைப் போல் தெய்வீகத்தைக் குழந்தையாகக் கண்டு மகிழ ஆரம்பித்தனர். அதனால்தான் பிற்காலத்தில் ஏற்பட்ட சாவித்திரி பாடம் போன்ற கவிதைகள் பிள்ளைக்கவி பாடுகின்றன. சாவித்திரி பாடத்தில் சுருக்கமாக ஒரு வர்ணனை உண்டு.

மாதா மனமகிழ வளர்ந்தாளே மங்கைநல்லாள்
தாயார் மனமகிழ தவழ்ந்து விளையாடினாள்
தத்தடியிட்டு நடந்தாளே தையலரும்
சித்தாடை கட்டி தெருவில் விளையாடி வந்தாள்
சுக்லபக்ஷ சந்திரன் போல் சுந்தரியும் தான் வளர்ந்தாள். . ."

இதை எல்லாம் சிந்திக்கும் போது ஸ்ரீஅரவிந்தர் தனது காவிய மாந்தர் வர்ணனை பாணிக்கு பிற்கால பிள்ளைக்கவி வரவுகளை

ஏற்றிருக்கிறார் என்பது தெளிவாகிறது. அவரே குழந்தைப் பருவம் பற்றி 1900 ஆம் ஆண்டு ஓர் அழகிய ஆங்கிலக் கவிதை எழுதியிருக்கிறார். அவரது உறவினர் மகளான பஸந்தி பற்றி கவிதை. தலைப்பே வெகு பொருத்தம். வசந்தத்தின் குழந்தை!

"இறைவனின் தோட்டத்தில் இதைவிட உயர் வண்ணங்களில்
பல மலர்கள் இருக்கக்கூடும்;
வளர்ச்சியுடன் ஒளி அதிகம் சிந்தக்கூடும்;
தூலிப் மலர், ரோஜா நெருப்புமிழும் மலர் பலவாம்;
ஆனால், இம்மலரோ அடக்கமாக வெண்மையாக
தண்மையுடன் காணுதம்மா!"

ஆங்கில இலக்கிய வித்தகரான ஸ்ரீஅரவிந்தர் வோர்ட்ஸ்வொர்த்தின் கவிதைகளில் தோய்ந்தவர். ஆனால் அந்த ஆங்கிலக்கவியின் சோகம் தீண்டிய பாணியில் அவரது கவிதைகளை அமைக்கவில்லை. மாறாக ஸ்ரீ அரவிந்தரது கவிதைகளில் ஆன்மீகமே சுருதி மீட்டும். அதுவும் சாவித்திரியின் பிள்ளைப் பருவம் பாடும்போதோ, ஓர் அவதாரத்தின் வளர்ச்சி பற்றியல்லவா எழுதுகிறார்! சாவித்திரியின் தோற்றம் பற்றிய காண்டத்தின் தலைப்பே இச்செய்தியை பதிவு செய்கிறது. "தீக்கொழுந்தின் அவதாரமும் பிள்ளைப்பருவமும்"(The Birth and Childhood of the Flame)

மண்ணுலகம் ஆர்வங்களின் பெட்டகமாக, பருவங்களின் சுழற்சியில் ஈடுபட்டு, ஒரு பேரொளியைச் சுற்றி வந்தது. ஆனால் அந்த ஒளியைத் தீண்டக்கூடிய சக்தி அதற்கில்லை என்று காண்டம் தொடங்குகிறது.

A MAENAD of the cycles of desire
Around a Light she must not dare to touch,
Hastening towards a far-off unknown goal
Earth followed the endless journey of the Sun.

வெகு தொலைவில், என்னவென்று புரியாத ஓர் இலக்கை நோக்கி மண்ணுலகம் தன் பருவங்கள் மூலம் தடையற்று பயணிக்கும் சூரியனைப் பின்பற்றியது. இதென்ன சாதாரணமான பிறப்பல்லவே! இப்பகுதியில் ஸ்ரீஅரவிந்தர் காட்டும் இயற்கை வண்ணங்கள் அற்புதம். மனித வாழ்வுடன் இசைந்து வரும் இயற்கையை நாம் பணிவுடன் காப்பாற்றினால், அவள் தராத பரிசு உண்டோ?

Earth's mood now changed; she lay in lulled repose,
The hours went by with slow contented tread:
A wide and tranquil air remembered peace,
Earth was the comrade of a happy sun.
A calmness neared as of the approach of God,
A light of musing trance lit soil and sky
And an identity and ecstasy
Filled meditation's solitary heart.

*பூமியின் மனநிலை இப்பொழுது மாறியது.*
*அவள் அமைதியாக இளைப்பாறினாள்.*
*நேரமும் நிறைவுடன் மெல்ல நகர்ந்தது.*
*ஒரு பேரமைதியை நினைத்து வீசும் காற்றும்*
*சாந்தமானது. மகிழ்ச்சி காட்டும் சூரியனுக்கு*
*வசுந்தரை தோழியானாள். கடவுள் அருகணைவதுபோல்*
*ஓர் அமைதி எங்கும் பரவியது. மவுனத்தில்*
*தனித்த இதயம் பேரானந்தம் கொண்டது.*

*மூன்று காலங்கள் கடப்பதை கவனித்து ஓர் அவதாரம் தோன்றுவதை எதிர்பார்த்தது. வண்ண வண்ண மலர்களுடன் வசந்தமும் வந்து உலகை நிறைத்தது. வயோதிகமும் மறந்து, மறைந்து போக, இளமையின் துள்ளலால் இனிதாக இவ்வுலகம் சிரித்தது. மலர்களும், பறவையினங்களும், மற்ற அனைத்து உயிர்களுமே இங்கு செழுமையுடன், வண்ண வண்ணப் பொலிவு காட்டும் போது, அழகின் வஸந்தோத்ஸவத்தில் இயற்கையின் வனப்பு அனைத்துமே குழுமிவிட்டதாகத் தோன்றியதாம்.*

*சாவித்திரி அவதரித்தாள். மனித வாழ்க்கையையும் தெய்வீகத்தையும் இணைப்பதற்காக அவதரித்தது போல என்றும், மரணப்பிடியில் அகப்பட்டிருக்கும் நமது வாழ்வை, அறியவொண்ணாததுடன் இணைத்தது போன்ற அவதாரம் என்று ஸ்ரீஅரவிந்தர் குறிப்பிடுகிறார்.*

A mightier influx filled the oblivious clay:
A lamp was lit, a sacred image made.
A mediating ray had touched the earth
Bridging the gulf between man's mind and God's;
Its brightness linked our transience to the Unknown.

சொர்க்கமே மானுட உருவம் கொண்டது என்பது போன்ற உருவம். மனிதப் பிறவியாயிற்றே என்று இந்த அவதாரம் விம்மவில்லை. தனது மலர்ந்த, அமைதி காக்கும் கண்களால் இவ்வுலகினை கவனமாக அந்தக் குழந்தை பார்த்தது. அசுவபதியின் அரண்மனையில் வந்தவதரித்த இந்தப் பிள்ளைக் கனியமுது என்ன செய்கிறது?

One had returned from the transcendent planes
And bore anew the load of mortal breath,
Who had striven of old with our darkness and our pain;
She took again her divine unfinished task:
Survivor of death and the aeonic years,
Once more with her fathomless heart she fronted Time.

மனித அறிவுக்கெட்டாத உலகிலிருந்து
இந்த சக்தி திரும்பி வந்தது.
துயரமிகு மானுட கஷ்டங்களை மீண்டும் ஏற்றது.
முன்னைய நாட்களில் நமது இருளடைந்த
வாழ்வில் போராட்டங்களை நடத்தியவள் இவளே.
நிறைவுபெறாத தெய்வீக செயற்பாடுகளை
செய்திட வந்து அவதரித்திருக்கிறாள்.
மரணத்தையும் ஊழிக்காலத்தையும் விஞ்சியவள்.
ஆழங்காணமுடியாத தன் இதயத்துடன்
காலத்தை எதிர்த்து நின்றாள்.

வானத்தினின்றும் இழிந்து வந்த இச்சக்தி ஒரு பேரெழில் உருவம் கொண்டது. தெய்வீக உருவத்தை மானுடரால் வர்ணிக்க முடியுமா? அதுவும் சாவித்திரியை? அவளது பேரெழிலுக்குச் சமானமாக யாரும் இல்லையே! அருணாச்சலக்கவிராயர் தமது இராம நாடகத்தில் சீதையின் அழகைக் "காணவேணும் லக்ஷம் கண்கள் சீதாதேவியின் காலுக்கு நிகரோ பெண்கள்" என்று கூறி இறுதியில் "அவனிமேல் இல்லை ஈடு அவளுக்கு அவளே ஜோடு" என்று நிறைவு செய்வார். அதுவே இங்கு பொருந்தும். விதவிதமாக உருவகங்களைத் தோற்றுவித்து சாவித்திரியை வர்ணிக்கும் போது, லலிதா சகஸ்ரநாமத்தை ஆங்கிலத்தில் படிப்பது போல ஒரு மகிழ்ச்சி, இனம் அறியாத பெருமை. இந்த அவதாரம் அன்றும் இன்றும் என்றும் தோன்றி மக்களை அழியாமல் காக்கும் எனும்

நம்பிக்கை நம்முள் பாய்கிறது. ஏனெனில் புற அழகு இங்கு முக்கியமல்ல. ஸ்ரீஅரவிந்தர் ஆங்காங்கே இப்பெண்ணிடம் ஒளிர்ந்த சக்தியை, வலிமையை, தைரியத்தை, தூய்மையைக் கோடிட்டுக் காட்டுகிறார்.

A scout of victory in a vigil tower,
Her aspiration called high destiny down;
A silent warrior paced in her city of strength
Inviolate, guarding Truth's diamond throne.
A nectarous haloed moon her passionate heart
Loved all and spoke no word and made no sign,
But kept her bosom's rapturous secrecy
A blissful ardent moved and voiceless world.

வெற்றி பெறும் சாரணன் காவல் பரணில் இருப்பதுபோல
அவளது ஆர்வம் உயர்ந்த விதியினை கீழே அழைத்தது.
அவளது வலிமையான, எதிர்க்க முடியாத மனத்துள்ளே
ஒரு மௌனச்சிப்பாய் அடி வைத்து நடந்து
கேடில்லாத உண்மையின் வஜ்ர அரியணையைக் காத்தான்
எல்லோரிடமும் அன்பு, பேச்சிற்கு இடம் ஏது.
சைகை ஏதும் செய்வதில்லை. அவளது
ஆர்வமிக்க இதயமோ அமுத, நிலவொளி வட்டம்,
அவளது நெஞ்சுக்குள்ளே அடக்கமான ஆனந்தம்.

புற அழகை வர்ணிக்கும் போது சாவித்திரியின் உடல் சொர்க்கத்தின் மெல்லிய, கண்ணாடி போன்ற ஒளியால் வார்க்கப்பட்டது போல் இருந்தது என்கிறார். அது போன்ற அழகினை கனவில்தான் காண முடியும், நனவுலகத்தில் காணக் கிடைக்காது. மனதை மயக்கும் வெள்ளத்தின் குறுக்கே இட்ட பொற்பாலமோ, அமைதியானதொரு குளத்தின் கரையிலே, சந்திரனது ஒளியில் தோன்றும் ஒற்றைப் பனை மரமோ? அவள் நடக்கும்போத சிலம்பின் ஒலி கேட்கும், அது தேவர்கள் நடந்து செல்வது போல் இருக்கும்.

இது உண்மைதானே! மண்ணில் விண்ணைக் கொண்டு வருவதே சாவித்திரியின் நோன்பு. அழகு, அறிவு, தூய்மை, நற்பண்பு என்று மனித வாழ்க்கையில் காணும் தெய்வீகமெல்லாம் அவளிடம் ஒன்று சேர்ந்திருந்தன. அதனால் போலும் அவளை நெருங்கிட மக்களுக்கு சற்று அச்சமே. அவளுடன் ஒத்த வயது இளைஞர்கள் சாவித்திரியின்

*பக்தர்களாக, மாணவர்களாக இருக்கவே விழைந்தார்கள். அவளது ஆன்மாவிற்கு இணையராகிட அவர்களிடம் ஆற்றல் இல்லை. அதற்காக அவள் தெய்வீக நிலையைத் துறக்கவும் முடியாதே! அவள் காரண ஜன்மம். ஒரு மாபெரும் காட்சி மாற்றத்திற்காக அவதரித்தவள். இதன் காரணமாக அவள் தனித்துப் போனதில் ஆச்சரியமில்லைதானே?*

But mid this world, these hearts that answered her call,
None could stand up her equal and her mate.
In vain she stooped to equal them with her heights,
Too pure that air was for small souls to breathe.
These comrade selves to raise to her own wide breadths
Her heart desired and fill with her own power
That a diviner Force might enter life,
A breath of Godhead greaten human time.

*அவளது அழைப்பைக் கேட்டு சிலர் அருகே வந்தாலும்*
*ஒருவரும் அவளுக்குச் சமமாக முடியவில்லை.*
*அவர்கள் நிலைக்கு இறங்கி வந்தும் பயனில்லை.*
*இப்பரிசுத்தமான காற்றினை சுவாசிப்பது எவ்வாறு?*
*இத்தோழமை ஆன்மாக்களில் தன் சக்தியை நிரப்பி,*
*மாபெரும் தெய்வீக ஆற்றல் இவர்களிடம் புகுந்து,*
*வருங்காலம் தேவனது மூச்சால் நிறைந்திட*
*உலக வாழ்க்கையில் புதிய சக்தி புகுந்திட வேண்டினாள்.”*

*அவள் தாயன்போடு மக்களது சிறுமதியின் பக்கலில் சாய்ந்து அவர்களது வாழ்க்கையை தன் தெய்வீக சக்தியால் நிறைவு செய்தாள். வேண்டிய தேவைகளை தானே உணர்ந்து உதவினாள். மேலெழுந்தவாரியாக நடத்தும் அவர்களது வாழ்க்கையின் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொண்டு உதவினாள். அவளைப் பொறுத்தவரை அவளது ஒரே துணை அவளது ஆன்ம சக்திதான்.*

Thus was it for a while with Savitri.
All worshipped marvellingly, none dared to claim.
Her mind sat high pouring its golden beams,
Her heart was a crowded temple of delight.
A single lamp lit in perfection’s house,
A bright pure image in a priestless shrine,

Midst those encircling lives her spirit dwelt,
Apart in herself until her hour of fate.

*இதுவே சாவித்திரியின் நிலை.*
*அனைவரும் இவளை வியந்து பூஜித்தனர்.*
*எவரும் அவளை நெருங்கவில்லை.*
*அவளது மனம் பொற்கிரணங்களைப் பொழிந்திட,*
*அவளது நெஞ்சம் ஆனந்தமயமான கோவிலானது.*
*குறையேதுமில்லா வீட்டில் ஒரு விளக்காக,*
*பூசாரியற்ற கோவிலில் தூயதொரு சிலையாக*
*சூழ்ந்துள்ள இவர்கள் நடுவே சாவித்திரி தேவி*
*விதி கூட்டும் நேரத்தை எதிர்நோக்கி இருந்தாள்.*

*சாவித்ரியின் பிள்ளைப் பருவம் ஆன்மிகச் செல்வமான கவிதையைத் தந்திருக்கிறது. ஒரே ஒரு முறை அவள் செய்த புற வழிபாடும் நமக்கு சுட்டிக்காட்டப்படுகிறது. அந்த அனுபவமே ஸ்ரீஅரவிந்தர் காட்டும் பிள்ளைக் கவிக்கு அழகிய முத்தாய்ப்பு வைக்கிறது.*

*ஒரு நாள் அன்புத் தந்தை அசுவபதி யோகத்தில் அமர்ந்திருக்கிறான். தியானத்தில் ஆழ முற்படும்போது கவலைகள் பல அவனைச் சூழ்கின்றன. பருவம் நிறைந்த தன் பெண் பற்றியல்ல அவனது கவலை. உலக மக்களை நினைத்து வருந்துகிறான். இவர்களுக்கு நல்ல காலம் எப்போது வருமோ? அத்வைத மத ஸ்தாபகரான ஆதி சங்கரர் கூறிவைத்தார்:*

*புனரபி ஜனனம், புனரபி மரணம்*
*புனரபி ஜனநீ ஜடரே சயனம்*
*இக சம்சாரே பஹூ துஸ்தாரே*
*கிருபா பாரே பாஹி முராரே*

*அது போல கௌதம புத்தரும் கூறிவிட்டார்:*

*“பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்*
*பிறவார் உறுவது பெரும்பேரின்பம்*
*பற்றின் வருவது முன்னது; பின்னது*
*அற்றோர் உறுவது, அறிக!”*

யோகத்தில் அமர்ந்திருக்கும் அசுவபதியின் மனத்தில் எண்ணங்கள் ஓடுகின்றன. ஆனால் இன்றைய காலைப்பொழுது ஒரு புதுப்படைப்பு, மரணபயமில்லாத, துன்பம் இல்லாத பெருவாழ்வு உதயமாகும் போல் இருக்கிறதாம். அந்த வாழ்வில் மகத்தான சூரிய ஒளியும் ஆனந்தம் பெருகும் ஆகாயத்தில் இருக்குமாம்.

"பழமைக்கும் பழமையான நீண்ட கால விருப்பம் புதிய வேர் விட்டது." இந்த தேன் சிந்தும் வசந்தத்தில், குயில் கூவுகிறது. மெல்ல வீசும் காற்றில் மரங்கள் அசைந்து கொண்டிருக்கின்றன. அனைத்திற்கும் காரணமான பெரும்பாழிலிருந்து பூமித்தாயின் மௌனக்குரல் அறியவொண்ணாத இறைவனை நோக்கி எழும்புகிறது. அசுவபதியின் நெஞ்சில் ஒலிக்கிறது. மனிதா! பிறந்து மீண்டும் அழிவதற்கா நீ தோன்றியிருக்கிறாய்? இல்லை, இல்லை, அழிவற்ற பொருளால் நீ சமைக்கப்பட்டிருக்கிறாய்!

> நீ ஆன்மாவின் தென்றலில் விழித்திடுவாய்.
> மானிட மனச்சுவர் உடைவதை உணர்ந்திடுவாய்.
> வாழ்வின் இதயத்தை ஊமையாக்கிய செய்தி கேட்டு
> சூரியனைக் காணும் கண்களால் இயற்கையை நோக்கிடுவாய்.
> சாச்வதத்தின் கதவடியில் உன் சங்கநாதம் முழக்கிடுவாய்.
> இயற்கையில் உயர் மாற்றம் செய்பவனே!

இப்படி அதிமானுட நிலையில் ஆழ்ந்து தெய்வத்தின் குரல் கேட்டிருக்கும் அசுவபதி, இனி நாம் செய்வது யாது என்று யோசிக்கும் போதினிலே, அவனது ஆன்மாவின் கேள்விகளுக்கு ஒரு விடை போல சாவித்திரி அங்கே நடந்து வந்தாள் என்கிறார் ஸ்ரீஅரவிந்தர்.

> Advancing amid tall heaven-pillaring trees,
> Apparelled in her flickering-coloured robe
> She seemed, burning towards the eternal realms,
> A bright moved torch of incense and of flame
> That from the sky-roofed temple-soil of earth
> A pilgrim hand lifts in an invisible shrine.

> சொர்க்கத்தின் தூண் போன்ற உயர் மரங்கள் நடுவே
> அவளது வண்ணச் சிற்றாடை காற்றிலே அசைந்தாட,
> புலப்படாத கோவிலிலிருந்து யாத்ரீகன் கைப்பிடித்த

நறும் புகை வீசும் ஒளிவிளக்கு ஒன்றுதான்
விண்ணின் கீழ் உள்ள மண்ணிலிருந்து
சாசுவதத்தை நோக்கி எழும்புவது போலவே வந்தாள்.

இதுவரை அவன் கண்ட சின்னஞ்சிறு கண்ணம்மாவை அசுவபதி காணவில்லை. மாறாக இங்கு வருவது சாவித்திரி எனும் சக்திப் பெருநெருப்பு. அவன் வேண்டிய அவதாரமேதானோ? சாவித்திரி பூஜை முடித்தபின் பிரசாதமாக மலர்களை ஒரு தட்டில் ஏந்தியவாறு வருகிறாள். தந்தையிடம் கொடுத்து வணங்குவாள். அசுவபதியின் தவம் பலிக்கும் நேரம் வந்துவிட்டது. மகாசக்தி சாவித்திரியின் தேவப்பிரசாதம் கிடைக்கப் போகிறது. இந்த தெய்வீக நேரத்தில் ஸ்ரீஅரவிந்தரின் பிள்ளைக்கவி நிறைவு பெறுகிறது.




சென்னையிலுள்ள தாய்லாந்து தூதர் தாய்லாந்தின்
தலைமை புத்த துறவியுடன் சாவித்ரி பவனுக்கு வருகை தந்தார்.

# சாவித்ரி - பன்முகச்சித்திரம் - 2

சு. புவனசுந்தரி, ஆரோவில்

*சென்ற ப்ரார்த்தனா இதழில் (21) நாம் சாவித்ரியின் பிறப்பைப் பற்றி படித்தோம். இப்போது, தமிழ் இலக்கியங்களில் ஒரு பெண் குழந்தையின் வளர்ச்சியினை அந்தந்த வயதிற்கேற்ப குறிப்பிட்ட பெயர் கொண்டு அழைப்பது போல் நாம் இங்கு சாவித்ரியை பெதும்பை (வயது 8-11), மங்கை (வயது 12-13), மடந்தை (வயது 14-19) என்ற நிலைகளில் காணவிருக்கிறோம். பொதுவாகவே நம் அனைவர்க்கும் பிடித்த பருவம், பள்ளி சென்ற, கலை பல கற்ற இளமைப் பருவம்தான். கவலைகளற்று, பெற்றோரின் அரவணைப்பில் அவர்களுடைய பாதுகாப்பில் சுகம் பல கண்டு, பார்க்கின்ற அனைத்துமே புத்தம் புதியதாய், ஆர்வமூட்டுவதாய், அச்சமிருப்பினும் அனுபவித்துப் பார்க்கத் தூண்டுவதாய், அமைந்திருக்கும் அந்த காலகட்டம் சுவை நிரம்பியது. வயதான பின்னும் கூட நினைக்குங்கால் இன்பமூட்டும், நினைத்துநினைத்துப் பார்த்து பரவசப்படும் காலகட்டம் அது. அதனால் தானோ என்னவோ பகவான், சாவித்ரி திருமணப் பருவம் அடையும் வரையிலான அந்த காலகட்டத்தை எழிலோவியமாக தம் காவியத்தில் ஒரு காண்டமாகவே கூறியிருக்கிறார். அக்காண்டமதை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது இக்கட்டுரை.*

*விதை வளர்ந்து செடியாகி ம்ருதுவான பேரெழில்கொள் மொட்டுகளைத் தாங்கி நிற்பது போன்று சுவர்க்கத்தின் மலர்ச்சியைக் காட்டி நிற்கிறது சாவித்ரி எனும் அந்த அவதாரம். மற்ற குழந்தைகளைப் போலின்றி மானுடப் பிறப்பெடுத்தபோதும், தன் கடவுட்தன்மையை தக்க வைத்துக் கொண்டிருந்தது. காணவியலா சூரிய ஒளி ஒன்று அம்மழலையின் நாளங்களில் ஓடியதால், அவளின் குழந்தைத்தனமான எண்ணங்கள் மிகச் செப்பமுடன் ஆன்மாவின் ஆழ் உண்மைகளுக்கு ஏற்ப ஒளிபொருந்திய வடிவுருக்களாகத் திருப்பப்பட்டன. மாறுபட்டதோர் பார்வையினைக் கொண்ட சாவித்ரி ஏரிக்கரைதனிலே சந்திரஒளி பட்டு தனித்து நிற்கும் ஒற்றைப் பனைபோல் கம்பீரமாய் வளருகிறாள்.*

ஒருவரின் பிறப்பும் வளர்ச்சியும் அவர் தோன்றுகின்ற இடத்தையும், சூழலையும் பொறுத்தது அல்லவா? கவலையற்ற வளர்ச்சிக்கும், வாழ்க்கைக்கும் உறுதுணையாய் நிற்பது வளம் பொருந்திய நாடேயாகும். இராமன் அவதரித்த அயோத்யா தேசம் பற்றி சொல்லப் புகுகையில் கம்பநாட்டாழ்வான் உரைப்பான்:

"வண்மை இல் ஓர் வறுமை இன்மையால்
திண்மை இல் ஓர் செறுநர் இன்மையால்
உண்மை இல் பொய்உரை இலாமையால்
வெண்மை இல் பல கேள்வி மேவலால்" என்று.

(வண்மை - வள்ளல் தன்மை, திண்மை - போர்/சண்டை, செறுநர் - பகைவர், வெண்மை - அறிவின்மை. கேள்வி - அறிவுத்திறம். இல், இன்மை என்ற சொற்களைக் கொண்டே அனைத்து உயர்வுகளும் இருக்கின்ற பான்மையைக் கவியரசர் காட்டியிருப்பதை இப்பாடலில் நாம் காண முடிகிறது.)

அஃதேபோல், இயல்பிலேயே யோகியாகிய அஸ்வபதி மன்னர் ஆளும் மாத்ரா தேசம் உயர்ந்த மலைகளையும், அகன்ற வயல்வெளிகளையும், வற்றாத நதிகளையும் கொண்டதாக, இயற்கைவளம் பொருந்தியதாக இருக்கிறது. ஆனால், சாவித்ரி பிறந்ததனால் அத்தேசம் வேறோர் வளத்தினையும் கொண்டதாக விளங்குகிறது. அதுதான் ஆன்மநேயம். அவளால் அத்தேசம் உயர்ந்து அவளைப் போலவே ஆழ்ந்த ஆன்மீக அமைதி கொண்ட உயர் ஆற்றல்களையும் வெளிப்படுத்திக் கொண்டு விளங்குகிறது. உயர்ந்த சிந்தனைகளைக் கொண்ட சூழல்களையும் கடவுளர் மற்றும் மனிதர்களின் மகத்தான சாதனைகளையும் வெளிப்படுத்தியவாறும் இருக்கிறது.

வளரும் இடம் எப்படி இருப்பினும் நாம் அதை எப்படிப் பயன்படுத்திக் கொள்கிறோம் என்பதல்லவா முக்கியம்? அழகு, அருள், பெருமிதம் இவற்றின் இல்லமாகக் காணப்பட்ட மாத்ரா தேசத்தில் இனி வரப்போகும் காணவியலா இறைச்சக்திகளைக் காந்தம் போல் கவர்ந்திழுக்கும் ஆற்றல் கொண்டவளாக சாவித்ரி விளங்குகிறாள். ஏற்கனவே அஸ்வபதி மன்னர் தான் தரிசித்த தெய்வீக அன்னையைத் துதிக்குங்கால், 'நமது கடின ஏற்றத்தினுடை காந்தமவளே' என்று வர்ணிக்கிறார் அல்லவா. அந்த அன்னையின்

*திருஅவதாரம் தானே சாவித்ரி, ஆகவே உயர்சக்திகளை கீழே மாத்ரா தேசத்திற்கு தடையின்றிக் கொணருகிறாள்.*

*சாவித்ரியின் ஆழ்மனதோடு இயற்கையின் ஞானம் கூட்டுறவு கொள்ள, அவள் எண்ணங்களுக்கப்பால் வளர்ந்து மனித மனங்கள் எட்டிடவொண்ணா உயரங்களைச் சென்றடைகிறாள். தன் உயர்வினை விரிவடையச் செய்து பிரபஞ்சத்தின் அகண்டத்திற்குள் செல்கிறாள். ஏனைய மனிதர்களால் நினைக்க இயலாததை நினைக்கவும், காண இயலாததைக் காணவும் அவளால் முடிகிறது. யாராலும் அறியப்படாதவொன்றை, எல்லையற்ற பரம்பொருளின் அடிவானங்களை மனிதர்களுடைய கண்களுக்குப் புலப்படுத்துகிறாள் வளர்ந்து வரும் அப்பருவத்தில்.*

*இந்த இடத்தில் நம் நினைவுக்கு வருவது அன்னையின் சிறுவயதில் (11-13) தினசரி இரவில் அவருக்கு ஏற்பட்ட அனுபவம்: அவர் தமது உடலை விட்டு சூட்சுமசரீரத்தில் பாரீஸ் நகரத்தின் மையத்திற்கு வந்து, மேலெழும்பிச் செல்ல அவரின் ஆடை விரிந்து பொன்னாலான குடை போல் மாறி, நகரம் முழுவதையும் கவிந்து கொள்ளும். அச்சமயம் துன்புற்ற மக்கள் நாற்புறங்களிலிருந்தும் சாரிசாரியாக வந்து அதனடியில் நிற்க, அப்போது ஓர் அமைதியும், ஆறுதலும் பெற்றனர். அவரின் அந்த அங்கியைத் தொடவும் முயற்சிப்பர், ஏனெனில் அதன் ஸ்பர்ஸம் அவர்களின் பிணி தீர்க்கும் மாமருந்தாக அமைந்திருந்தது.*

*அவளின் இச்சிறு வயதுச் செயலால் தெரிவது என்ன? அவள் தன்னின் வளர்ச்சியில் மட்டும் திருப்தியுறவில்லை. தன் அவதார நோக்கமாகிய இவ்வையகத்தையும் பயனுற, உயர்வடையச் செய்ய எண்ணுகிறாள் என்பதே. ஆகையால்தான், அவள் வளர்ந்து வருங்கால், அம்மண்ணின் மக்களது ஆக்கங்கள் எல்லைகளற்ற, அளக்க முடியாத நிலைகளுக்குச் சென்றன. சாதாரண மானுட உணர்வுகள் மற்றும் மனோநிலைகளைப் போலில்லாமல் கலைகளும், அழகுணர்ச்சியும் உயிர்ப்பின் அடிஆழங்களிலிருந்து வெளிப்போந்தன. ஆங்கு ஆன்மாவோடு இயற்கையும் கூட உள்ளார்ந்த மேதகைமையை சுவாசித்தது. மனிதக்கோட்பாடுகள் அவர்களது உணர்வுகளைச் செம்மைப்படுத்தி, அப்பாலுக்கு அப்பால் உள்ளதை அடையும்படியான தன்மையைப் பெறச் செய்தன. சுவர்க்கத்தை இங்கே பிரதிபலிப்பவை போல ஆகின.*

இந்தப் பருவமானது, கல்விக் கேள்விகளில், கலைகளில் பயிற்சி மேற்கொள்ளும் காலமாகும். நம் சாவித்ரியும் எந்தவொரு கலையையும் விட்டு வைக்காமல் எல்லாவற்றையும் கசடறக் கற்கிறாள். தான் கற்ற எல்லாக் கலைகளின் உள்ளார்ந்த கூறுகள் அனைத்தையும் தனக்குள்ளே கிரகித்துக் கொள்கிறாள். இங்ஙனம் தான் அடைந்த ஞானத்தின் துணை கொண்டு தனது எண்ணங்களை உயர்ந்ததோர் சத்தியஒளியை நோக்கி உயரச் செய்கிறாள். அவளுடைய வாழ்வின் அனைத்து நிகழ்வுகளுமே அவளுக்குச் சொந்தமென விளங்கும்(உயர்உலகங்களைச் சேர்ந்த) இரகசியமான சக்திகளை அனுமதிப்பதற்கான கதவங்களாகின்றன. அவளுக்கு, வாழ்வு முழுவதுமே பரவசத்தோடு அர்ப்பணிக்கப்பட்ட ஒன்றாக ஆகிறது.

அச்சிறு வயதிலேயே அவள், ஓர் உண்மையை உணர்ந்த அறிவார்ந்த வழிகாட்டியாக, பரவசத்தினால் தீட்சை அளிக்கப்பட்ட குருவாக விளங்குகிறாள். இயற்கையெனும் பள்ளியில் பயிற்றுவிக்கப்பட்ட தெய்வீக திருக்கோவிலின் காவலராக, படைப்பின் அதிசயத்தால் சூழப்பட்டவளாக இருக்கிறாள். அற்புதத்தின் வழிபாட்டுக்குரிய மேடையிலே தன் இதயத்தின் இரகசிய ஆழ்பரவசங்களைப் படையல் ஆக்குகிறாள். அவளது நேரங்களோ வாழ்வெனும் கோவிலிலே இடைவிடாது நடைபெறும் வழிபாட்டுச் சடங்குகள் ஆகின்றன. அவளது செயல்பாடுகளோ வாழ்வெனும் வேள்வியின் முக்கியத்துவம் வாய்ந்த அசைவுகள் ஆகின்றன. அவளது பேச்சோ புனிதமான சக்தியைக் கொண்டிலங்குகிறது.

அவளிருக்கும் அந்த காலகட்டத்தில், தீவிரமான தத்துவங்கள் மனிதர்களின் மனங்களை அதிமனித நிலைக்கு உயர்த்தின. சிற்பக்கலை, ஓவியக்கலை யாவும் இயற்கையின் வெளிப்பாடுகளை உடையதாய், தூயதாய், அவற்றின் உள்ளார்ந்த ஆழம், அமைதி, இறைத்தன்மை பொதிந்தவையாய் வெளிப்பட்டன. கட்டிடக்கலை, இசை, கைவினை, இலக்கியம், கணிதம், வானியல், சோதிடம் என்று அனைத்து அறிவியலும் சரி, நுண்கலைகளும் சரி மனிதனை கடவுளுக்கருகேயே இட்டுச் சென்றன. ஆயினும் சாவித்ரிக்கோ இவை எல்லாமே மிகச் சாதாரணமாய் இறைவனை அடைய இடையே அமைக்கப்பட்ட படிக்கட்டுகளாய், முற்றுப் பெறாததாய் தோற்றமளித்தன. இதையேதான் 1926ல் ஆசிரமத்தில் 'மேல்மன இறக்கம்' வந்துற்ற போது, பகவான் அன்னையிடம் கூறுகிறார்.

தவிரவும், பகவான் அன்னைக்கு ஆரம்பகாலத்தில் எழுதியுள்ள ஒரு கடிதத்திலும் குறிப்பிடுகிறார்: "விண்ணுலகை நாம் கைப்பற்றி விட்டோம்; ஆனால் மண்ணுலகை இன்னும் பிடித்தோமில்லை. நமது யோகமே, வேதத்தில் கூறியள்ளபடி சுவர்க்கத்தையும் பூமியையும் சமமாக, ஒன்றாகச் செய்யும்போதுதான் பூரணத்துவமடையும்".

இந்த இடத்தில் நான் சற்றே சாவித்ரியை வர்ணிப்பதை விட்டுவிட்டு, பகவான் காட்டும் ஓர் அழகிய உவமையைக் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நமக்குத் தண்ணீர் கிடைக்க, கிணறு தோண்ட வேண்டும். அப்படிக் கிணறு தோண்டும்பொழுது "நீர் நிலை அறிந்து சொல்பவர் (Water Diviner)" ஒருவரை அழைத்து நல்லநீர் உள்ள இடத்தைத் தேர்ந்தேடுத்து சொல்லச் சொல்வோம். அவர் குறிப்பிட்ட வடிவு கொண்ட குச்சி ஒன்றைக் கொண்டு வருவார். நிலத்தில் நடந்து செல்லும்போது அக்கோல் அசையும் தன்மையைப் பொறுத்து கிணறு தோண்ட வேண்டிய இடத்தைக் குறிப்பிட்டுக் காட்டுவார். இக்கலைகள் யாவும் அக்கோலை ஒத்தவை என்று பகவான் உவமித்துக் காட்டுகிறார். எப்படி கோல் உண்மையான ஊற்றுநீரைக் கொண்டு வரவில்லையோ, இடத்தை மட்டுமே காட்டியதோ, அதே போல உச்சநிலையில் உள்ள கலை, காவியம், சிற்பம், அறிவியல் அனைத்தும் மனித மனங்களை தெய்வீகநிலை ஒன்றுள்ளது என்ற நிலைக்கே கொண்டு செல்ல முடியும், உண்மையான இறைவனைக் கொணரவியலாது என்பதை மிகமிக அழகாக உருவகித்துக் காட்டுகிறார். காவியத்தில் காணப்படும் பல ஒப்புயர்வற்ற உபமானங்களுள் இதுவும் ஒன்று. இறுதியாக ஓர் ஒற்றை வரியில் கூறகிறார்.

"சொர்க்கமதனை வெற்றி கொள்ள புவியானது ஒரு படிக்கட்டாக அமைக்கப்பட்டது"

Earth made a stepping-stone to conquer heaven,

(l.113 p.362)

என்று.

இதனை உணர்ந்த சாவித்ரி என்ன செய்கிறாள் தெரியுமா? அனைத்துள்ளும் குடிகொண்டுள்ள உலகான்மாவை, அதனோடு தன் ஒன்றிப்பை உணர்ந்தவளாய், அவள் மற்ற மனிதர்களை நோக்கி தன்னை, தன்னிதயத்தைத் திறக்கிறாள். தன்னில் உறையும் ஆன்மாவே எல்லாவற்றினுள்ளும் அமைந்துள்ளது, அவளுடைய

*இருப்பே மற்ற மனிதர்களாக பிரதிபலிக்கிறது, நிறைவு செய்கிறது, தன்னின் விரிவாக மலர்கிறது என்பதை உணர்கிறாள். ஆனால் உடல், மனம் என்னும் சுவர்களால் பிரிக்கப்பட்டு இருப்பதை அறிகிறாள்.*

*"பிரபஞ்ச இருப்பு அனைத்தினுள்ளும் (குடி)இருப்பதை அறிந்தவளாய்*
*வாழும் இதயங்களை மானுடவடிவங்களை நோக்கி அவள் திரும்பினாள்,*
*அவளான்மாவின் பிரதிபலிப்பு, இணைநிறைபொருள், மறுபடிவம்,*
*அவளிருப்பின் நெருங்கிய புறத்தே காண் பகுதி*
*அவளிடமிருந்து உடலாலும் மனத்தாலும் பகுக்கப்பட்டிருந்தது*
*எனினும் அவளின் சித்துருவுடன் தெய்வீகஇணைப்பால் கட்டுண்டு இருந்தது"*

*(ஆங்கிலவரிகள்-117- 121 -பக்கம் 362)*

*எப்படி இருப்பினும் சாவித்ரி இத்தடுப்பை மீறுகிறாள். எங்ஙனம்? அனைத்தையும்*

*தனதோர் பரந்த அரவணைப்பிற்குள் கொண்டு வந்தவாறே.*

*இந்த இடத்தில் புத்தகம் ஒன்றின் முதற் காண்டமாகிய சங்கேத வைகறையில் பகவான் கூறியுள்ள வரிகளை நினைவிற்குக் கொண்டு வர விழைகிறேன்.*

*"தனித்து, அகத்தினுள் வாழ்ந்தவாறு, அனைத்துயிரையும் கைக்கொண்டு*
*பற்றின்றி, பாரினை தன்னகத்தே சுமந்தவாறிருந்தாள்" என்கிறார். மேலும் "பிரச்னை" என்ற 2ம் காண்டத்தில் வருகின்ற வரிகளும் கவனத்திற்கு வருகின்றன.*

*"அவளகத்தே இருந்த அன்பு பிரபஞ்சத்தை விட அகன்றிருந்தது*
*அனைத்துலகும் அவளின்ஓர் இதயத்தே குடிகொளவியலும்"*

*இங்கே அவள் வளரும் பொழுதே, இளம் பருவத்திலேயே அகில உயிர்களையும் தன்னகத்தே கொணர்ந்தவாறு, அவற்றை பிளவுபட்ட, இருண்ட தெளிவற்ற நிலையிலிருந்து உயர்த்த*

எண்ணுகிறாள். எதை நோக்கி? ஒளியார்ந்த ஞானத்தை நோக்கி. எல்லாவற்றையும் தன்னோடும், இயற்கையோடும், இறைவனோடும் ஒன்றித்த நிலையில் இருக்கச் செய்வதற்காக.

"அவள் அனைவர்க்குமாக மிகப்பரந்த அரவணைப்பை
உருவாக்க ஆவல் கொண்டாள்
அதில் அவள் அனைத்துயிர்களையும் குடியேறச் செய்யலாம்
காண்கின்ற ஒளியின் நிறைநலமார்ந்த புள்ளியை நோக்கி
உயரச் செய்யலாம்
அடர்ந்த இருளார்ந்த பிளவின் கூறுபாடுகளிலிருந்து,
இறையோடும் உலகோடும் தன்னோடும் ஒன்றிக்கச் செய்யலாம்"
(ஆங்கிலவரிகள் - 125-129-பக்கம் 362)

என்ற வரிகள் இதனை நமக்கு எடுத்துரைக்கின்றன.

தெய்வத்திடமிருந்து அழைப்பு வருகிறது, இறைவன் மண்ணை நோக்கி, இரக்கம் கொண்டு இறங்கி வருகிறான். ஆயின் எத்தனை உயிர்கள் அவ்வழைப்பிற்கு செவிசாய்த்து பதிலுரைக்கின்றன அல்லது இணங்கிச் செயல்படுகின்றன? இதைத்தான் ஸ்ரீஅரவிந்தர் தனது "அன்னை" என்ற நூலின் ஆரம்ப வரிகளிலேயே மிகத் தெளிவாகக் கூறுகிறார்:

"இரு சக்திகள் உள்ளன, அவற்றின் இணைந்த செயலின் மூலமே, நமது முயற்சியின் மிகப் பெரிய, மிகக் கடினமான நோக்கம் நிறைவேற முடியும். கீழிருந்து அழைக்கும் தளராத நிலைத்த ஆர்வம், மேலிருந்து அதற்கு பதிலளிக்கும் பேரருள்".

மேலும் அதே புத்தகத்தின் மூன்றாவது அத்தியாயத்தின் தொடக்கம் இவ்வாறு அமைந்துள்ளது:

"எவ்வித அச்சமோ, ஆபத்தோ, அழிவோ இன்றி வாழ்க்கைப் பாதையில் செல்லத் தேவையானவை இரண்டு - ஒன்று தெய்வ அன்னையின் அருள், மற்றொன்று உன் பக்கத்தில் நம்பிக்கை, நேர்மை, சரணம் இவை கூடிய அகநிலை".

ஈங்கு இதைச் சொல்வதன் காரணம் என்ன? வளர்ந்து வரும் சாவித்ரியின் ஆவலுக்கு (அன்னையின் அழைப்பிற்கு) இணங்கி நின்றோர் சிலரே, அதிலும் மிகச் சிலரே தெய்வீகத்தால்

நுணுக்கமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவள் சாவித்ரி என்பதை உணர்ந்தனர்.

"*மிகச் சிலரே அவளின் அழைப்பிற்கு பதிலுரைத்தனர்"*
Only a few responded to her call:' (l.130 p.362)

என்கிறார். உண்மையும் அதுதானே.

இந்த இடத்தில் இம்மங்கைநல்லாள் சாவித்ரியின் உடனிருப்போரைப் பற்றியும் விரிவாக பகவான் கூறுகிறார். படிப்பதற்கு மிகவும் சுவாரசியமான பகுதி. தெய்வத்தை நோக்கிச் செல்லும் பக்தர்களின் தன்மைகளை அதி விரிவாக இனம் பிரித்துக் காட்டுகிறர். இப்பகுதியைப் படித்துவிட்டு நாம் எந்த வகையைச் சேர்ந்திருக்கிறோம் என்று கணித்துக் கொள்ளலாம். பின்னர் நம்மை உயர்த்திக் கொள்ளவும் செய்யலாம்.

**முதல் வகையினர்:** (ஆங்கிலவரிகள் - 131-139-பக்கம் 362)
சாவித்ரியினுடைய தெய்வீகத்தை உணர்ந்து தங்களது தெய்வீக உணர்வை அவளோடு இணைக்கக் கடினமாக முயற்சி செய்தனர். தங்களது ஒத்த பண்புகளினால் அப்படி முயற்சி செய்கின்றவர்களுக்கு அவளுடைய சுவர்க்கம் சார்ந்த ஒளியானது கணப்பொழுதே, மின்வெட்டுப் போல் புலப்படுகின்றது. ஆனால் அதை அவர்களால் தக்க வைத்துக் கொள்ள இயலவில்லை. ஆகவே அவர்கள் அன்றாட வாழ்க்கையின் மந்தமான நிகழ்வுகளில் வீழ்ந்தனர்.

**இரண்டாவது வகையினர்:** (ஆங்கிலவரிகள் - 140-147-பக்கம் 363)
மனோமய வாழ்வை நடத்துபவர்கள்- அவளுடைய விரிவடைந்த தன்மையை நெருங்கிச் செல்வது போலத் தோன்றினாலும், அவர்கள் யாவரும் மனிதப் பண்புகளால் சிறைப்பட்டவர்களாய் இருந்தனர். அவர்களால் அவளுடைய தளராநடையோடு இணைந்து செல்ல முடியவில்லை. அவளுடைய பெருவிருப்பு, பரந்தநோக்கு, பெருந்தன்மை யாவும் அவர்களைச் சீக்கிரமே களைப்படையச் செய்தன.

**மூன்றாவது வகையினர்:** (ஆங்கிலவரிகள் - 148-164-பக்கம் 363)
எண்ணங்களால் சாவித்ரியோடு இணைந்திருந்த கூட்டாளிகள். அவளுடைய ஒளிக்கருகாமையில் நடக்க இயன்ற அவர்களுக்கு, அவளுள் உறைந்திருக்கும் சக்தியையும், ஒளியையும் உணர்ந்து

அவளை வழிபடமட்டும் முடிந்ததே தவிர அவளுடைய ஆன்மாவோடு பொருந்த இயலவில்லை.

அவள் தன்னோடு இருந்தவர்களை தான் அடைந்த உயரங்களுக்கு உந்தித் தள்ளிய போதிலும் அது அவர்களால் இயலவில்லை. ஏனெனில் அவள் காட்டிய உன்னதங்களை அவர்களால் கருத்தில் கூட உருவாக்க முடியவில்லை. ஆயினும் அவர்கள் சாவித்ரி என்ற சூரியனைச் சுற்றிச் சுழலும் சார்புக்கோள்களாக வலிந்து ஆக்கப்பட்டனர். அவளுடைய ஒளியிலிருந்து விலகிச் செல்ல இயலாமல், தங்களுடைய நீட்டிய கரங்களால் அவளை ஆவலுடன் இறுகப் பற்றிக் கொண்டனர். இல்லையெனில் அவள் அமைத்துத் தந்த பாதைகளில் தட்டுத்தடுமாறிப் பின்தொடர்ந்தனர்.

**நான்காவது வகையினர்:** *(ஆங்கிலவரிகள் - 165-173 - பக்கம் 363)* உணர்ச்சிகளின்பால் ஆட்பட்டவர்கள். இவர்களோ தங்களது இதயத்திற்கு ஊக்கமளிக்கவும், ஊன்றுகோலாய் இருக்கவுமென அவளைத் தொற்றிக் கொண்டவர்கள். அவளுடைய மற்ற உயர்வினை, அதன் பயன்களைக் காண முடியாதவர்கள் இவர்கள். இவர்கள் உணர்ச்சிகளாலும், ஏக்கமுறும் இதயத்தாலும் கட்டுப்பட்டவர்களாதலால் குழம்பிய மானுட அன்பு கொண்டு அவளைத் துதித்தனர். மற்றபடி அவளுடைய உன்னதமான ஆன்மாவை உணரமுடியவில்லை. அவள் அருகாமை கூட அவர்களை மாற்ற முடியாமல் இருந்தது.

**ஐந்தாவது வகையினர்:** *(ஆங்கிலவரிகள் - 174-193 -பக்கம் 363 -364)* தங்களது ஆன்மாவோடு அவளை உணர்ந்தனர். அதனால் சிலிர்ப்புற்றனர். ஆனாலும் மனதினால் கிரகித்துணர முடியாமல் போனது. மனித உருவுக்குள் உயர்ந்ததும் பரந்ததுமான ஒன்று வந்துள்ளதை உணர்ந்து, அவளுடைய பிரசன்னத்தை அறிந்தனர். அந்த சக்திக்கு அடிபணிந்தனர். அதனால் அவர்கள் ஒரு புதிய தெய்வீகக் காற்றினை, விடுதலையடைந்த, மகிழ்வு பொருந்திய உலகத்தை நோக்கி அழைத்துச் செல்லப்பட்டனர். ஆன்மாவிலும், ஒளியிலும் உயரே ஏறிச் சென்றனர். அவளுடைய உயரங்களை எட்டமுடியவில்லை என்றாலும் அவளுடைய ஸ்பரிஸத்தை உணர்ந்தனர். சூரிய ஒளிக்குத் தம்மை (முற்றிலுமாகத்) திறக்கும் மலர்களே போல் முழுவதுமாகத் தம்மை அவளுக்கு

*ஈந்தனர். வேறெதையும் அவர்கள் வேண்டினார்களில்லை. இந்த முத்தாய்ப்பான வரிகளைப் பார்ப்போம்.*

> *"அவர்கள் நேசித்த அவர்களை விஞ்சிய சித்துருவொன்றின்;*
> *அளவுதனை அவர்களால் எட்டவியலாதெனினும் அவளின்*
> *ஸ்பர்ஸமதனை தாங்கவியன்றது,*
> *சூரியனுக்குத் திறவாயிருக்கும் மலர்களைப் போல*
> *திறவாயிருந்தனர்*
> *அவர்கள் தங்களை(முற்றும்)அவளிடத்தே ஈந்து யாதொன்றையும்*
> *யாசித்தார்களில்லை."*

> A being they loved whose bounds exceeded theirs;
> Her measure they could not reach but bore her touch,
> Answering with the flower's answer to the sun
> They gave themselves to her and asked no more.

*(*l.190-193 p.364)

*அத்தகையோரின் வாழ்வு முழுவதும் அவளால் ஏற்று நடத்தப்பட்டது. புதிய, தெரியா பெருநிலைகளுக்கு நகர்த்தப்பட்டனர். நம்பிக்கை அவர்களை இழுத்துச் சென்றது. அவளுடையவளாகத் தங்களை உணர்ந்து ஆனந்தம் அடைந்தனர். அவளில் வாழ்ந்தனர். உலகினை அவள் மூலமாகவே பார்த்தனர்.*

***ஆறாவது வகையினர்:** (ஆங்கிலவரிகள் - 208 -215-பக்கம் 364 -365) இவர்கள் அவளை எதிர்த்தனர். ஆயினும் எதிர்ப்புக்கும் ஆச்சர்யத்திற்குமிடையே துண்டாடப்பட்டனர். இருப்பினும் அவளால் ஆட்கொள்ளப்பட்ட அவர்கள் அவளைத் தங்களிடத்தே வைத்துக் கொள்ள மிகவும் முயன்றனர். ஏனெனில் அவர்களது எதிர்ப்புசக்தி மிகவும் வலிமையாக இருந்தது. இது எப்படி இருந்தது? வர்ணிக்கிறார் பகவான்: அவர்கள் தாங்கள் ஏதோ நுகத்தடியில் மாட்டிக் கொண்டதாகப் புலம்பினார்கள். ஆனாலும் அப்பிணைப்பினின்றும் வெளிவர விரும்பாதவர்களாக இருந்தனர் என்கிறார்.*

> *"தாங்கள் இழக்கவேண்டிவரின் அழநேரிடும் நுகத்தடிநோக்கி*
> *முணுமுணுத்தனர்"*
> *(ஆங்கிலவரி - 214-பக்கம் - 365)*

நுகத்தடி என்பது அவளுடைய அன்பும் அழகுமே. அவை அவர்களைக் கட்டிப் போடுகிறது. அதிலிருந்து விடுபடமுடியாமல் முணுமுணுக்கின்றனர்.

**இறுதியாக, ஒருவகையினர்:** தமது ஆசைகளை, தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள மட்டுமே சாவித்ரியைப் பின்தொடர்கின்றனர். இவர்கள் கடைநிலை பக்தர்களுக்கொப்பாவர். ஆரம்பகாலத்தில் தோன்றும் பக்தி என்றும் சொல்லலாம். நம்மில் பெரும்பாலோர் இதுபோன்ற பக்திஆர்வம் கொண்டவர்களாய்த்தான் இருக்கிறோம். அன்னையிடமோ/ தெய்வத்திடமோ சென்றால் "எனக்கு இதைக்கொடு, அதைக்கொடு" என்றுதான் பிரார்த்திக்கிறோம். மற்றபடி இறைவனுக்காக இறைவனை பிரார்த்திப்பதில்லை என்பதே கண்கூடு. எத்தனையெத்தனை பூசைகள், படையல்கள், காணிக்கைகள், பரிகாரங்களை மக்கள் செய்வதைக் காண்கிறோம். இத்தகையோர் சாவித்ரியின் தெய்வத் தன்மையை சற்றும் உணராதவர்களே. ஆதலால் அவளுடைய அணுக்கத்தை அவர்களால் தாங்கவியலவில்லை. அவர்கள் பூமியின் சாதாரண இயல்பிற்கு அவளை இழுக்கவே விழைந்தனர்.

"தங்களின் இயல்பான பூமிக்கு அவளை இழுக்கவே
அவாவினர்.
மற்று தமது உணர்ச்சிக்காட்பட்ட வாழ்விற்கு அவளை
மையமாக்கினர்
தங்களது மானுட இதயத்தேவைகளில் அவளைப்
பிணைக்கவென நம்பினர்
தமது ஆன்மாவினை அவளது பேரொளிக்கும்
தெய்வத்திறத்திற்கும் அடிமையாக்கினர்"
(ஆங்கிலவரிகள் - 237 -240-பக்கம் -365)

இத்துணை வகையினராக மனிதர்கள் இருந்தனர். அவளுடைய உயர்தகைமையின் காரணமாக,

"அவளுடைய அழைப்பாணைக்குப் பதிலுரைத்த இவ்வுலகின்
நடுவே
யாராலும் அவளுக்கிணையாக அவளுக்குற்ற துணையாக நிற்க
ஏலவில்லை."

"But mid this world, these hearts that answered her call,
None could stand up her equal and her mate"

(l.241&242 P.365)

என வரப்போகின்ற கதைக்கான, சாவித்ரியின் அவதாரநோக்கத்தின் மூலத்திற்கு வித்திட்டு விட்டார் ஸ்ரீஅரவிந்தர் இந்த வரிகளில்.

ஆகவே சாவித்ரியின் உயர்தகைமையினால் அவள் தனியாக இருக்கிறாள்.

"அவளின் உயர்மிகு தற்படிவம் தனியே வாழ்ந்தது, உரிமை கொண்டாடப்படாததாய், அகத்துள்ளேயே"

Her greater self lived sole, unclaimed, within.

*(l.263 p.366)*

சாவித்ரி எத்துணை முயற்சி செய்து, அனைத்து ஆன்மாக்களையும் ஒருசேர உலகன்னையே போல் தனது பரந்த ஆன்மாவோடு அணைத்து வைத்திருக்க வேண்டியுளது. ஆயின், அகத்தே அவள் தன்னந்தனியாகவே, யாராலும் சொந்தம் கொண்டாட முடியாதவளாக இருக்கிறாள். ஈங்கு பகவான் சாவித்ரியை வெகு அழகாக தெய்வீகஅன்னையின் வடிவாக, அதேசமயம் அவள் மனிதநியதிகளுக்கு உட்பட வேண்டியுள்ள நிலையையும் (மணம் புரிந்து கொள்ள வேண்டிய நிலை. அவள் சத்யவானை மணந்து கொள்வதன் மூலமே தனது அவதார நோக்கத்தை நிறைவேற்ற முடியும்) எடுத்துக் கூறுகிறார்.

இந்தநிலையில், யாரோடு சாவித்ரி முழுமையாக, மனதார, களங்கமற்ற மென்மையான நிலையில் ஒன்றென உணர்கிறாள் தெரியுமா?

"அவளது ஆற்றல் அகிலத்தின் மனிதரல்லாதவற்றை இழுத்தன
தன்னின் சுதந்திரமான விரிந்த பரவசமுற்ற ஜீவனுடன்
ஆர்வமிக்க எழில்கொள் நேர்த்தியான வாழ்வு கொண்ட
விலங்கு பறவை மலர்கள் மரங்கள் இவற்றை இணைத்தனள்."

(ஆங்கில வரிகள் -265-268 பக்கம்-366)

அப்போது நடந்ததென்ன?

"அவையனைத்தும் திறந்த எளிமையான இதயத்துடன்
அவளுக்கு விடைபகர்ந்தன".
(ஆங்கில வரி 269)

(என்று கூறுவதன் மூலம் பகவான் மனிதர்களைக் காட்டிலும் இயற்கை உயர்ந்திருப்பதைக் கூறுகிறார். காரணம், அவற்றிற்கு பகுத்தறிவு இல்லை, தேவைகள் குறைவு, ஆனால் உயர்வுக்கான ஆர்வம் அதிகம் என்பதே.)

இப்போது பலபேர் அவளை நோக்கி வந்தபோதும், தன் ஆன்மாவிற்கு உகந்த துணையை, அவளின் மறுபதிப்பைக் காணமுடியாமல் வாழவேண்டும் என்ற நிலையில் இருக்கிறாள். ஏன் தெரியுமா?

"அவளருகில் ஈர்க்கப்பட்டு வந்தோரில் யாரையுமே அவள்
காணவில்லை
அவளான்மாவின் தோழனை, தன்னையொத்த ஆன்மாதனை,
இறையும் இயற்கையும் ஒன்று கலந்தாற் போல அவளோடு
வந்த மறுபதிப்பை"
(ஆங்கில வரிகள் 274-276 பக்கம்-366)

இங்ஙனம், சாவித்ரி தனக்குள்ளே, ஒரு சிறியவட்டத்திற்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். அந்நேரத்தில், சூழ்வளியில் ஏதோவோர் அரும்பெரும் நிகழ்வு நிகழப் போகிறது என்ற எதிர்பார்ப்பு மிகுகிறது. பின்னர், சாவித்ரியின் இத்தகு மேன்மையியல்புகள் மெதுவே சுற்றுப்புறங்களில் பரவுகிறது. பலராலும் பேசப்படுகிறது.

"வையகத்தின் நோக்கு அவளைக் கண்டுபிடித்தது
அற்புதம் தன் கவியார்ந்த குரலினை உயர்த்தியது.
ஜீவனின் குகைதனில் இதுகாறும் வைக்கப்பட்டிருந்த ஒளியின்
தாக்கோல்,
பழமைமிகு மறைபொருளதன் உணர்வின் ஒளியார்ந்த சொல்,
(என)
அவளின் நாமம் மனிதர்களின் இதழ்களிலே
முணுமுணுக்கப்படலாயிற்று"
(ஆங்கில வரிகள் - 299-303 பக்கம் 367)

அவளுடைய அழகும், ஒளிரும் சக்தியும் சாதாரண மனிதர்களால் எட்டிப்பிடிக்க முடியாததாக இருந்தன. இதனை பகவான்

ஓர் அழகான, அருமையான உவமையால் எடுத்துரைக்கிறார். அடிவானத்தில் தோன்றும் மின்னலென அவள் தோன்றினாள் என்கிறார். மின்னலின் ஆற்றலைப் பற்றி நாம் அறிவோம். அதாவது, ஒரு கணமே தோன்றினாலும் அதிலிருந்து வெளிப்படும் ஒளி, மின்சக்தி, பின்னர் இடியாக அது தரும் பெருத்த ஓசை இவை எல்லாம் மனிதர்களால் நெருங்குவதற்கு அச்சமூட்டுவதாய், சொல்லப் போனால் அஞ்சி ஓடவன்றோ செய்து விடுகிறது. ஆங்கே கருத்தவானத்தில் தொலைவில் மின்னும் ஒளியானது காண்பதற்கு பரவசமூட்டக்கூடியதாய், கையில் எடுத்துக் கொண்டுவிடலாம் போலத் தோன்றிடினும், மின்னலை மனிதர்களால் அணுகமுடியுமா என்ன? தூரத்தேயிருந்து ரசிக்கமட்டுமே இயலும். காவியத்தின் இவ்வரிகளைக் காண்போமா?

"அவளது பொலிவும் கனல்கின்ற ஆற்றலும் தூரத்தே
தெரிவுற்றன
இருண்டு வரும் நேரத்தே விளையாடும் மின்னலென
(அது)நெருங்கற்கியலா தெய்வீகமதன் ஒரு மகத்துவம்"

Her beauty and flaming strength were seen afar
Like lightning playing with the fallen day,
A glory unapproachably divine.

(l.309-311 p.367)

இம்மட்டோடு பகவான் மங்கை சாவித்ரியை வர்ணிப்பதை நிறுத்தினாரில்லை.

ஒப்புயர்வற்ற இளவரசி அவள். மணப்பருவத்தின் தலைவாயிலில் நிற்கின்ற, தெய்வீகமே இம்மண்ணில் உருவெடுத்து நிற்கும் மங்கைதனை, வழிபட்டு நெருங்கி வரவும் அஞ்சி நின்றார்கள் ஆடவர்கள். கீழ்க்காணும் வரிகளில் சாவித்ரியின் அனைத்து அழகுகளையும் சித்தரித்துக் காட்டி விட்டார். அதனைக் காண்போம்:

"எந்தவொரு கடந்து சென்றுவிடக் கூடிய பூவுலக அன்பும்
அவளின் நிதானத்தை தாக்கவில்லை,
எந்தவொரு வீரஉணர்ச்சிக்கும் அவளைக் கைக்கொள்ளும்
பலமில்லை;

*எந்தவொரு பார்வையுமே அவளின் விடையிறுக்கும்*
*பார்வையை வேண்டவில்லை.*
*அவளின் உள்ளார்ந்த ஆற்றல் செப்பமிலா மனிதஇனத்தை*
*மலைக்கச் செய்தது;*
*நம் பிண்டத்தினுள்ளே காணும் தற்காக்கும் கூர்மதிநலம்*
*(அப்)பெண்மணி வடிவின்கண் இறைவியை உணர்த்தியது*
*மற்றும் அதன் தன்மையைத் தாண்டியதோர் ஸ்பர்ஸத்தை*
*பின்னுக்கிழுத்துக் கொண்டது*
*மண்ணுலகு சார்ந்த புலன்-வாழ்வால் அமைந்த குறுகிய*
*அமைவிலிருந்து.*
*ஆடவரின் இதயங்கள் புறஅழகை மோகித்தன*
*தெய்வதத்தின் தனிப்பாங்கினையோ உயர்வினையோ*
*கைக்கொள்ள (இயல)வில்லை"*
*(ஆங்கில வரிகள் 313-324 பக்கம் - 367-368)*

*இதன்பின் வரும் நான்குவரிகள் சாவித்ரியை சுட்டிக்காட்டி பகவான் மனிதவினத்துக்குத் தரும் ஒரு மகத்தான செய்தியாகும். நம் மனதைவிட்டு அகலாததாக அமைந்துள்ளன. இவ்வரிய யோகத்தில் ஈடுபட்டவர்களுக்கு ஓர் உபதேசமாக பகவான் கூறியிருக்கும் வரிகள் தினந்தோறும் படித்துணரத் தக்கவை. நாம் மேற்கொண்ட யோகப்பாதையில் கைக்கொள்ள வேண்டிய ஊக்கத்தைத் தளராதிருக்கச் செய்யும் வரிகள். அவை என்னவென்பதைப் பார்ப்போம்:*

*"எவரொருவர் மிகுஉயர்வினை அடைகின்றாரோ அவர் தனித்தே*
*வாழ்தல் வேண்டும்.*
*வந்தனை செய்யப்படும் அவன் ஏகாந்தத்திலேயே நடைபோட*
*வேண்டும்;*
*தன்னைப் போன்றே படைக்க முயலும் அவன் பணி*
*வீண்முயற்சியே*
*அவனது ஒரே தோழன் அவன் தன்னிடத்தே கொண்டுள்ள*
*வலிமையே."*

Whoever is too great must lonely live.
Adored he walks in mighty solitude;
Vain is his labour to create his kind,
His only comrade is the Strength within. (l.325-328 p.368)

*மரணமில்லா வெளிகளிலிருந்து கனலுகின்ற செய்திகளைக் கொணர்ந்துள்ள சாவித்ரியும் அஃதேபோல் சிறிது காலத்திற்கு தனித்து வாழ நேரிடுகிறது என்கிறார் பகவான். இதோ அங்ஙனம் தனிமையில் 'குன்றின் மேலிட்ட விளக்காக' வாழும் சாவித்ரி பற்றிய வர்ணனை பகவான் வரைந்திருக்கும் வரிகளில்:*

*"வியப்புறுவகையில் அனைவரும் துதித்தனர், ஒருவரேனும் சொந்தம் கொள்ள பயந்தனர்.*
*அவளது மனம் உயரே அமர்ந்து பொற்கதிர்களைப் பொழிந்தவாறிருந்தது.*
*அவளது இருதயமோ ஆனந்தப்பரவசம் கோலோச்சும் கோவிலானது.*
*பூரணத்துவத்தின் இல்லமதிலே ஏற்றி வைத்த ஒற்றை தீபமென*
*பூசாரியில்லா கர்ப்பக்ருஹத்தின் ஓர் ஒளிரிடும் தூய பிம்பமென,*
*சூழ்ந்திருக்கும் சிற்றுயிர்த் தொகுதிகளின் மத்தியில் அவளின் ஜீவன் குடியிருந்தது,*
*தனித்து தன்னகத்துள்ளே தனக்கு விதிக்கப்பட்ட நேரம் வரும் வரை."*

*(ஆங்கில வரிகள் 330-336 பக்கம் - 368)*

*தனித்திருக்கும் இம்மடவன்னம்(சாவித்ரி) காதல் ஒருவனைக் கைப்பிடிக்கும் பாங்கினை, அந்நேரத்தே காணும் அவளின் அழகினை, மனோநிலையினைக் காணக் காத்திருப்போம்.*

*சாவித்ரி வளர்வாள்....*

*இக்கட்டுரையில் காணப்படும் சாவித்ரி வரிகளைத் தமிழாக்கம் செய்தது - கட்டுரை ஆசிரியர்*

# சாவித்ரி விளக்கம் 9

நூல் ஒன்று: காதை மூன்று
மன்னரின் யோகம்: ஆன்மவிடுபாட்டு யோகம்
வரிகள் 228 ___ 332
ஆங்கிலத்தில்: ஷ்ரத்தாவன்
தமிழில்: தனலட்சுமி

He heard the secret Voice, the Word that knows,
And saw the secret face that is our own.
The inner planes uncovered their crystal doors;
Strange powers and influences touched his life.

*இவ்வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனுபவங்கள் நம் உள் ஜீவன் திறக்கும் பொழுது ஏற்படும் பல்வேறு விதமான அனுபவங்கள். இந்த அனுபவங்களில் ஒன்று அசுவபதி "அந்த இரகசியக் குரலைக்" கேட்கிறார். இங்கு "Voice" என்பதில் V பெரிய எழுத்தில் உள்ளது, ஆகவே 'குரல்' என்பது உயர்வான ஒன்றாக, அர்த்தமுள்ள ஒன்றாக, அதனுடைய பேச்சு அர்த்தமுள்ள ஒன்றை சுட்டிக் காட்டுகிறது என நம்மால் அறிய முடிகிறது. அதனுடைய சொற்கள், பேச்சு ஆகியவை சிருஷ்டிக்கும் பேச்சாக, புதிதாக ஒன்றை வெளிக் கொணர்வதாக இருக்கிறது. அசுவபதி கேட்கும் அக்குரல் இப்பொழுது ஞானத்தை அளிப்பதாக இருக்கிறது. மேலும் அவர் ஒரு முகத்தைக் கூட பார்க்கிறார். அந்த இரகசியமான முகம் நம்முடைய முகத்தைப் போன்று, நம் அனைவருள்ளே வதியும் முகத்தைப் போன்று இருக்கிறது.*

*சில வீடுகள் பல உட்பகுதிகளையும் பாதைகளையும் கொண்டிருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் இவ்வரிகளில் சொல்லப்பட்டிருப்பவை நம்முள்ளே இருக்கும் இடங்கள்; இங்கு ஸ்ரீஅரவிந்தர் உள் நிலைகளைப் பற்றிப் பேசுகிறார், பல நிலைகளிலிருக்கும் அக உணர்வினைப் பற்றிப் பேசுகிறார் என்பது நமக்கு விளங்குகிறது. உணர்வின் இந்த ஒவ்வொரு நிலைக்கும் ஒரு கதவு நம்மை இட்டுச் செல்கிறது. அக்கதவு ஸ்படிகத்தால் ஆனது.*

ஸ்படிகங்கள் கண்ணாடியை விட அழகானவை, ஏனெனில் அது கற்களிலிருந்து, மலைகளிலிருந்து வருகிறது, மிக மிகத் தெளிவான, ஒளிரக்கூடிய ஒரு பொருள் இந்த ஸ்படிகங்கள். விந்தையான ஆற்றல்களும் அதன் பாதிப்புகளும் இத்தகைய அக தளத்திலிருந்து அவருடைய வாழ்வை அடைகின்றன.

A vision came of higher realms than ours,
A consciousness of brighter fields and skies,
Of beings less circumscribed than brief-lived men
And subtler bodies than these passing frames,
Objects too fine for our material grasp,
Acts vibrant with a superhuman light
And movements pushed by a superconscient force,
And joys that never flowed through mortal limbs,
And lovelier scenes than earth’s and happier lives.

மேலேயுள்ள வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றுமொரு அனுபவம். இந்த அனுபவத்தைப்பற்றி ஸ்ரீஅரவிந்தர் தன்னுடைய ஈரேழ்வரிப்பாடலான “The Other Earths” இல் குறிப்பிட்டுள்ளார். அசுவபதி நாம் வசிக்கும் இவ்வுலகைவிட மேலான உலகங்களை, உயர் உலகங்களைப் பார்க்கிறார். அவர் ஒளிமிக்க தளங்களையும் ஆகாயங்களையும் பற்றிய உணர்வினைப் பெறுகிறார். நம்முடைய உலகில் சூரிய ஒளி படும்பொழுது அனைத்தும் ஒளிர்கின்றன. ஆனால் அவ்வுலகிலுள்ள பரப்புகளும் ஆகாயங்களும் வேறுவிதமான ஒளியைப் பெற்றிருக்கின்றன. அங்குள்ள ஜீவர்கள் நம்மைப் போன்று பிறப்பும் இறப்புமான குறுகிய காலம் வாழும் மனிதர்கள் அல்லர். *‘circumscribed’* என்றால் வரையப்பட்ட வட்டம் என்பது பொருள் - எல்லைகளுள்ள ஒரு வட்டம். மனிதர்களாகிய நாம் சில காலமே வாழக்கூடியவர்கள், வரையறைக்குட்பட்டு வாழக்கூடியவர்கள் என்கிறார் ஸ்ரீஅரவிந்தர். ஒரு வட்டத்திற்குள்ளோ அல்லது ஒரு சுழற்சிக்குள்ளோ பிறப்பும் இறப்புமான வரம்பிற்குட்பட்ட சுழற்சிக்குள் அடைபட்டு வாழ்கிறோம். ஆனால் அசுவபதி, அவ்வுலக ஜீவர்களை சுதந்திரமானவர்களாக சூட்சும உடலினைக் கொண்டவர்களாகக் காண்கிறார். நம்முடைய உடலைப் போன்று மடிந்து போகும் உடலைக் கொண்டவர்களாய் இல்லாது சூட்சும உடலைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். நம்முடைய உடல், அதாவது

இந்த வடிவம் நம்முடைய எண்ணங்களையும், உணர்வுகளையும், வாழ்வையும் தாங்கி நிற்கிறது. மேலும் இவ்வடிவம் சிறிது காலமே நிலைத்திருக்கக் கூடியது. ஆனால் சூட்சும உடலைக் கொண்ட அந்த ஜீவர்கள் நம்மைப் போன்று மடிந்து போக வேண்டிய அவசியமில்லை. அவ்வுலகிலுள்ள பொருட்கள் கூட சூட்சுமத் தன்மை கொண்டவை. அதனால் நம்முடைய தூலக் கைகளினால் அவைகளைப் பிடிக்க முடியாது. அங்கு நடைபெறும் அனைத்து செயல்களும் ஆற்றல் நிறைந்தவை, அதிர்வுத் தன்மையுடையவை, உயிரோட்டமுள்ளவை, நம்முடைய உணர்வுக்கும் ஒளிக்கும் அப்பாற்பட்டவை.

அவ்வுலகின் இயக்கங்கள் அனைத்தும் மானுடர்களாகிய நாம் அறியாத ஓர் உயர் சக்தியினால் உந்தப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. அவ்வுலக ஜீவர்களின் ஆனந்தமும் பேருவுவகையும் மானுடர்களின் உடல் அறியாதது. மிக மிக அற்புதமான ஒன்று நடைபெறும் பொழுது ஆனந்தம் நம் உடலினுள் பாய்ந்து செல்வதை நம்மால் உணர முடியும். சூட்சும உடலில் பாயும் ஆனந்தத்தை நம்மால் அனுபவிக்க இயலாது, அத்தகைய ஒளி மிக்க நிலத்திலும் ஆகாயத்திலும், புவியிலுள்ள காட்சிகளையும் வாழ்வையும் விட அற்புதமான ஒன்று இருக்கிறது. ஸ்ரீஅரவிந்தருடைய கடிதம் ஒன்று இங்கு என் நினைவிற்கு வருகிறது. ஒரு சாதகர் சூரியோதயம், மலைகள், கடல் என இயற்கையின் அழகைப் பற்றி ஸ்ரீஅரவிந்தருக்கு எழுதிய கடிதத்தில் மிக உற்சாகமாக விவரித்திருந்தார். "ஆம் இவையனைத்தும் அழகானவைதான், ஆனால் சூட்சும உலகில் இதைவிட அழகான விஷயங்கள் இருக்கின்றன, நம்முடைய அகக் கண்கள் திறக்கும் பொழுது நாம் இத்தகைய அனுபவங்களைப் பெறுகிறோம்." என அக்கடிதத்திற்கு பதிலளித்தார்.

> A consciousness of beauty and of bliss,
> A knowledge which became what it perceived,
> Replaced the separated sense and heart
> And drew all Nature into its embrace.

இது மன்னர் அசுவபதியின் உணர்வைக் குறிக்கிறது என நினைக்கிறேன். 'A consciousness' என்றால் அவருடைய உணர்வு தன்னுடைய இச்சிறிய மனித எல்லையைத்தாண்டி உயர்ந்ததைக்

குறிக்கிறது என்கிறார் ஸ்ரீஅரவிந்தர். ஒன்றை மனதால் உணரும்பொழுது அல்லது பார்க்கும்பொழுது நம்மை நாமே அறிந்தது போன்று முழுமையாக அதனுடன் ஒன்றிவிடுகிறோம். நாம் இங்கு நடக்கும் விஷயங்களை நம்முடைய ஐம்புலன்களின் வாயிலாகவே அறிகிறோம். இது நம்மை அவ்விஷயங்களிலிருந்து பிரித்துவிடுகிறது. நம் புலன்கள் நமக்கு உணர்த்தும் விஷயங்களைப் பற்றிய முழுமையான ஞானம் நமக்கிருந்தால் அவ்விஷயத்தை முழுமையாகவும் பூரணமாகவும் அறிந்து கொள்ளமுடியும். ஆகவே இத்தகைய புதிய உணர்வும் ஞானமும் வேறுபடுத்திப் பார்க்கும் புலனையும் இதயத்தையும் மாற்றி வைக்கிறது. இப்புதிய உணர்வும் ஞானமும் இந்த இயற்கை அனைத்தையும் தன்னுடன் அணைத்துக் கொள்கிறது. இப்பொழுது அசுவபதி அனைத்தையும் எடுத்துக் கொள்கிறார், தன்னுடையதாக விழிப்புடன் அணைத்துக்கொள்கிறார். இங்கு 'all Nature' என அவர் குறிப்பிடுவது தூல இயற்கையை மட்டுமல்லாது அக உலக இயற்கையையும் ஆகும்.

> The mind leaned out to meet the hidden worlds:
> Air glowed and teemed with marvellous shapes and hues,
> In the nostrils quivered celestial fragrances,
> On the tongue lingered the honey of paradise.

இது யோகிகள் குறிப்பிடும் மற்றொரு அனுபவம். நம்முடைய அகத்திலுள்ள புலன்கள் திறக்கும் பொழுது, நம்முடைய உடல்கூட மறைந்துள்ள அகவுலக அனுபவங்களைப் பெறுகின்றது. இந்த அகவுலகங்களின் சூழல் நாம் அனுபவிக்கும் இப்புவியின் அனுபவங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. மேலும் அந்த அகவுலகங்கள் ஒளி பொருந்தியவையாகவும் உயிர்துடிப்பு மிக்கவையாகவும் இருப்பதை உணரலாம். 'Teeming' என்றால் மொய்த்தல். ஒரு சிறு சோற்றுப் பருக்கை கீழே விழுந்துவிட்டால் எறும்புகள் மொய்த்துவிடுகின்றன அல்லவா? எறும்பு, தேனீக்கள் போன்ற சிறுசிறு ஜீவன்கள் கூட்டமாக மொய்த்துக் கொள்ளும் தன்மை உடையவை. அதன் எண்ணிக்கையை நம்மால் கணக்கிட முடியாது. ஆனால் மன்னர் அசுவபதி தற்பொழுது மறைந்திருக்கும் சூட்சும உலகங்களைப் பற்றி அறிந்தவராக இருக்கிறார். அதனால் இச்சூழல் முழுவதும் அற்புதமான வடிவங்கள், நிறங்கள், நறுமணங்கள் என அளவற்று அவரை மொய்த்துக் கொள்கின்றன.

*அவருடைய நாசி இப்புவியில் நுகர்ந்தறியாத நறுமணங்களால் சூழப்பட்டிருப்பதை உணர்கிறது. தியானத்தில், ஒருமுனைப்பட்ட நிலையில் அற்புதமான சுவையின் மணம் வீசுகிறது. அவருடைய நாவில் தேவலோக அமுதத்தின் சுவை தெரிகிறது.*

A channel of universal harmony,
Hearing was a stream of magic audience,
A bed for occult sounds earth cannot hear.

*இப்பொழுது ஸ்ரீஅரவிந்தர் அசுவபதியின் சூட்சுமமான கேட்கும் தன்மையைப் பற்றி சற்று விரிவாக விளக்குகிறார். மற்ற தன்மைகளைப் பற்றி அதாவது நுகர்தல், சுவைத்தல் ஆகிய தன்மைகளைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லியிருப்பதை நாம் முந்தைய பத்தியில் பார்த்தோம். ஆனால் இப்பொழுது சூட்சுமமாக கேட்கும் தன்மை பற்றிய அற்புதமான அனுபவங்களை மிக விரிவாக நமக்கு இங்கு விளக்குகிறார். சூட்சுமமாக கேட்கும் திறன் 'பிரபஞ்சத்தின் இசைவிற்கு ஒரு வாய்க்காலாக' இருக்கிறது என்கிறார். அற்புதமான இசைவான ஒலிகள் சூட்சும பிரபஞ்சத்திலிருந்து வருகின்றன – 'a stream of magic audience'.* Audience *எனும் இச்சொல்லை ஆங்கிலத்தில் உபயோகிக்கும் பொழுது ஓரிடத்தில் நடக்கும் நிகழ்ச்சியை அமர்ந்து பார்ப்பவர்களைக் குறிக்கிறது. நிகழ்ச்சியில் பங்கேற்பவர்கள் இருக்கிறார்கள் அதைக் கண்டு கேட்டு மகிழ்பவர்கள் இருக்கிறார்கள். இங்கு ஸ்ரீஅரவிந்தர் இச்சொல்லின் மூலமான பிரெஞ்சு மொழிச் சொல்லின் பொருளான 'கேட்டல்' எனும் பொருளிலேயே உபயோகிக்கிறார். இவ்வரியில் கேட்டல் என்பது ஒரு நீரோடை போல் இருப்பதாகச் சொல்கிறார். அந்த ஒலிகள் வாய்க்கால் வழி செல்லும் நீர் வயல்களை நிரப்புவதைப் போன்று கேட்டல் எனும் அந்த உணர்வு சூட்சும உலகிலிருந்து நீரோடையாக வந்து நிறைகிறது. இத்தகைய நுண்ணுலக ஒலிகளை நம்முடைய தூல காதுகளினால் கேட்க இயலாது. பின் எத்தகைய விஷயங்களைப் பற்றி அவர் கேட்கிறார்?*

Out of a covert tract of slumber self
The voice came of a truth submerged, unknown
That flows beneath the cosmic surfaces,
Only mid an omniscient silence heard,
Held by intuitive heart and secret sense.

*‘Out of a covert tract of slumber self…’* tract என்றால் ஒரு சிறு நிலப்பரப்பை அல்லது ஓர் இடத்தைக் குறிக்கும். இங்கு covert tract என சொல்லப்பட்டிருக்கிறது —— covert space என்றால் இரகசியமான, மறைவான ஓரிடம் என்பது பொருள். covert எனும் இச்சொல் சூட்சுமமான, மறைபொருளான எனும் சொல்லை ஒத்திருக்கிறது அல்லவா? இந்த மறைவான இடம், உறங்கும் ஜீவனின் உறைவிடமாக இருக்கிறது. Slumber என்றால் உறக்கம் என்பது பொருள்; உறங்கும் ஜீவன் - அது விழிப்பு நிலையில் இல்லை, ஆனால் உறங்கும் உணர்வாக, முழுவதுமாக அகவுணர்வில் ஆழ்ந்திருக்கிறது. அதிலிருந்து உண்மையின் குரல் வருகிறது. அக்குரல் தரைமட்டத்திலிருந்து அல்ல ஆழத்திலிருந்து வருகிறது. “submerged” எனும் சொல்லைப் பார்க்கிறோம். இச்சொல்லுக்கு நீரில் மூழ்குதல் என்பது பொருள். ஒரு நீர்மூழ்கிக் கப்பல் கடலின் மட்டத்திலிருந்து கீழே செல்லும், முதலில் நீரின் மேல்மட்டத்திலிருந்து கீழே செல்லும். இது போன்று உண்மையும் மேலே இல்லாமல் கீழே அமிழ்ந்து இருக்கிறது. அதனை யாரும் அறியமாட்டார்கள் ஏனென்றால் உண்மை இப்பிரபஞ்சத்தின் மேலே இல்லாமல் கீழ் நோக்கி பாய்ந்து செல்கிறது. அந்த உண்மையின் குரலை நாம் அமைதியான நிலையை அடையும் பொழுதே கேட்க இயலும். அந்நிலையில் நாம் அனைத்தையும் அறிய முடியும். Omniscient எனும் சொல்லுக்கு அனைத்தையும் அறிந்தவன் என்பது பொருள். இந்த உண்மையின் குரலை உள்ளுணர்வால் இயங்கும் இதயத்தினாலும் நுண் புலன்களாலும் மட்டுமே அறிய முடியும் - நம்முடைய உடலிலுள்ள ஐம்புலன்களால் அல்ல, அகத்திலுள்ள மறைவான நுண்புலன்களால் மட்டுமே அறிய முடியும்.

இப்பொழுது அவர் உண்மையின் குரலைப் பற்றி பேசுகிறார்:

> It caught the burden of secrecies sealed and dumb,
> It voiced the unfulfilled demand of earth
> And the song of promise of unrealised heavens
> And all that hides in an omnipotent Sleep.

இங்கு ஸ்ரீஅரவிந்தர் “burden” எனும் சொல்லை உபயோகிக்கிறார். சாவித்ரி காவியத்தில் பல முறை இச்சொல்லை உபயோகித்திருக்கிறார். இச்சொல்லுக்கு இரண்டு பொருள்

உண்டு. burden என்றால் நம்மால் தூக்க முடியாத பளுவான ஒன்றை தூக்குதல். அது மிகவும் கனமாக இருந்தால் நாம் அதனை கீழே வைத்துவிடுவோம். ஆனால் ஒரு பாடலோ அல்லது ஒரு செய்தியோ கூட பளுவாக இருக்குமல்லவா? அது ஏதோ ஒரு செய்தியை நமக்குத் தெரிவிக்கிறது. தற்பொழுது இப்பொருளில் அதிகமாக உபயோகப்படுத்துவது இல்லை. ஆனால் ஒரு பாடலில் குறிப்பிட்ட வரிகள் மீண்டும் மீண்டும் இடம்பெறும் பொழுது, அப்பாடல் வெளிப்படுத்தும் செய்தியை burden என்கிறோம். "அவருடைய வார்த்தைகள் என் நினைவில் இல்லை, ஆனால் அது குறிப்பிடும் செய்தி இதுதான் . . . " என நாம் சொல்வதுண்டு, மேலும் அதன் பொருளையும், அப்பாடலின் கருவையும் நாம் விளக்க முனைவதுண்டு. இங்கு ஸ்ரீஅரவிந்தர் அடிஆழத்தில் புதைந்துள்ள உண்மையின் குரலை *'Caught the burden of secrecies sealed and dumb'* என்கிறார். அத்தகைய இரகசியமான மறைவான இடங்களின், அதன் இயக்கங்களின் செய்தி எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்தது? அது மூடி சீல் வைக்கப்பட்டுள்ளது, ஊமையானது, தன்னை வெளிப்படுத்திக் கொள்ளத் தெரியாதது. இத்தகைய இரகசியங்கள் ஏதோ ஒரு பளுவை சுமந்து கொண்டிருக்கின்றன. இந்த உண்மையின் குரல் அப்பளுவை அதன் பொருளைப் பற்றிக் கொள்கிறது, பின் அதை வெளிப்படுத்துகிறது, குரல் கொடுக்கிறது —— புவியின் நிறைவேறாத கோரிக்கைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. நாம் வாழும் இவ்வுலகம் நிஜமாகவே எதை விரும்புகிறது? அதனுடைய விருப்பம்தான் என்ன? அக்குரல் *'The song of promise of unrealized heavens'* – உணரப்படாத உலகங்களின் உறுதிமொழியை பாடலாக அது வெளிப்படுத்துகிறது. நாமறியாத வேறு பல உலகங்கள் இருக்கின்றன, ஆனால் எதிர்காலத்தில் இத்தகைய உலகங்கள் இருப்பது உணரப்படும். அப்பொழுது இவ்வுலகின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும். சர்வவல்லமையுள்ள தூக்கத்தில் அனைத்தும் வெளிப்படாமல், ஆழ்ந்த உறக்க நிலையிலிருந்து விழித்துக் கொள்வதற்காக, மீண்டும் பிறப்பதற்காக மறைந்திருக்கிறது. அற்புதமான அக்குரல் இத்தகைய செய்திகளை தன்னுள்ளே சுமந்தபடி இருக்கிறது.

> In the unceasing drama carried by Time
> On its long listening flood that bears the world's
> Insoluble doubt on a pilgrimage without goal,

A laughter of sleepless pleasure foamed and spumed
And murmurings of desire that cannot die:
A cry came of the world's delight to be,
The grandeur and greatness of its will to live,
Recall of the soul's adventure into space,
A traveller through the magic centuries
And being's labour in Matter's universe,
Its search for the mystic meaning of its birth
And joy of high spiritual response,
Its throb of satisfaction and content
In all the sweetness of the gifts of life,
Its large breath and pulse and thrill of hope and fear,
Its taste of pangs and tears and ecstasy,
Its rapture's poignant beat of sudden bliss,
The sob of its passion and unending pain.

அசுவபதியின் ஆன்மாவுக்கு கிடைத்த கொடை, இப்புதிய சூட்சுமமாக கேட்கும் திறன். முடிவற்ற நாடகத்தை, எப்பொழுதுமே தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்நாடகத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். இந்நாடகம் காலத்தால் கட்டுண்டது, காலம் என்பது ஒரு நதியைப் போன்றது அல்லது கடலைப் போன்றது. "flood" எனும் வார்த்தையால் இதைக் குறிக்கிறார். Flood என்றால் ஒரு நதியையோ அல்லது கடலையோ குறிக்கும். காலத்தின் ஓட்டம் கூட கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது. காலம் என்பது ஒரு பெரிய நதியையோ அல்லது பெரும் அலையையோ ஒத்திருக்கிறது. அது தன்னுடன் இவ்வுலகின் நிலையற்ற தன்மையை தாங்கி வருகிறது, தான் எங்கோ தொலைந்துவிட்ட ஓர் உணர்வை, தீர்த்த யாத்திரை செல்கிறோம் ஆனால் நாம் எங்கு செல்கிறோம் என அறியாமல் இருப்பதைப் போன்ற ஓர் உணர்வை ஏற்படுத்துகிறது. இந்த முடிவற்ற நாடகம் காலத்தால் நடத்திச் செல்லப்படுகிறது. இந்நாடகத்தின் பின்னால் ஆனந்தம் மெல்லிய இழையாகப் பாய்கிறது. *'A laughter of sleepless pleasure foamed and spumed'*, ஒரு நதி வேகமாக பாய்ந்து செல்லும் பொழுது அதன் மேற்பகுதி நுரைத்து எழும்; அந்த நுரை காற்றில் பறந்து செல்வதை நாம் spume என்கிறோம். நுரைத்து எழுவதைச் சொல்வதனால் அந்த நதியின் ஓட்டத்தில் உயரமாக எழும் அலைகள் இருக்கின்றன என்பதை நாம் அறிய முடிகிறது. அந்த

அலைகள் உயர்ந்து சத்தமிட்டு எழுவது உறக்கமற்ற மகிழ்வின் சிரிப்பு போல் இருக்கிறது என்கிறார். மேலும் ஒரு முணுமுணுப்பும் கேட்பது போன்று இருக்கிறது என்கிறார். முணுமுணுப்பு என்றால் ஒருவர் பேசும்பொழுது அவர் என்ன சொல்கிறார் என்பதை நாம் தெளிவாகக் கேட்கமுடியாது. முடிவற்ற இறவாத விருப்பத்தை வெளிப்படுத்தும் முணுமுணுப்புகள் அதில் இருக்கின்றன. ஆனந்தத்திற்குரிய உலகின் கூக்குரல் கேட்கிறது. இந்த இருப்பிலே ஓர் ஆனந்தம் இருக்கிறது, நாம் அனுபவிக்கும் மகிழ்ச்சிக்கும் வலிக்கும் கீழே ஆனந்தத்தின் ஓர் அலை ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த இருப்பிலே ஆனந்தத்தை அனுபவிக்கிறது. அதனுடைய மேதகைமையும் உயர்வும் வாழ்வதற்காகவே உறுதி கொண்டுள்ளது. இவ்வுலகம் வாழவே விரும்புகிறது, அனைத்தையும் அனுபவிக்கவே விரும்புகிறது. இந்த ஆனந்தம், இத்தூல உலகில் தான் மேற்கொள்ள வேண்டிய தீரச்செயலை ஆன்மாவிற்கு நினைவுபடுத்துகிறது.
அந்த ஆன்மா காலம் இடம் இவற்றால் அழியாததாக பயணித்துக் கொண்டிருக்கிறது, "மந்திர நூற்றாண்டுகளினூடே" பயணிக்கிறது, அந்த ஆன்மா இவ்வுலகில் மிகக் கடுமையான உழைப்பு, போராட்டம் என இவற்றை அனுபவிக்கிறது. இந்த இருப்பின் தேடல் எதற்காக? "அதனுடைய பிறப்பின் மறை பொருளைக்" கண்டறியவே. ஏன் அது பிறந்தது? அதனுடைய தேடலில் கடுமையான முயற்சி இருந்தது. ஆனால் அதனோடு 'உயர்வான ஆன்மிக மறுமொழி கிடைத்த ஆனந்தமும்' அங்கு இருந்தது. வாழ்வின் இனிமையான பரிசு எதுவாக இருந்தாலும், என்ன நடந்தாலும் அதில் ஒரு திருப்தி, நிறைவைக் கண்டது அந்த இதயத்தின் துடிப்பு. இப்பொழுது நம்முடைய கவி, ஸ்ரீஅரவிந்தர் வாழ்வின் கொடைகள் என்னென்ன என்பதைச் சொல்கிறார்: அவை நம்பிக்கையாலும் பயத்தாலும் ஏற்படும் நீண்ட சுவாசம், இதயத்தின் பேரொலி அதன் சிலிர்ப்பு, அதனுடைய பலவகையான சுவைகள், இதை நாம் பலவகையான 'ரசங்கள்', பலவகையான இன்பங்கள் எனச் சொல்லலாம். வாழ்வினுடைய வலிகள், கண்ணீர், பேரானந்தம், மேலும் கலப்பற்ற பேரின்பம் கூர்மையான வாளைப் போல் திடீரென மிகவும் ஆற்றலோடு நம் இதயத்தைத் துளைத்துச் செல்வது; கண்களில் பெருகும் கண்ணீர், அது துக்கத்தினாலா அன்றி பேருவுவகையினாலா என பகுத்தறிய முடியாத விம்முதல், அதனுடைய தீராத விருப்பத்தின் காரணமாக ஏற்படும் வலி ஆகியன. ஆழத்தில் இருக்கும் உண்மையின் குரல்

இவையனைத்தையும் பற்றிக் கொண்டு இவை அளிக்கும் வியத்தகு உணர்வுகளையும் அனுபவங்களையும் வாழ்வு வெளிப்படுத்துகிறது என்கிறார்.

The murmur and whisper of the unheard sounds
Which crowd around our hearts but find no window
To enter, swelled into a canticle
Of all that suffers to be still unknown
And all that labours vainly to be born
And all the sweetness none will ever taste
And all the beauty that will never be.

அசுவபதி இது போன்ற ஒரு வகையான ஒலியைக் கேட்கிறார். இவ்வரிகள் எப்பொழுதுமே என்னை மிகவும் கூர்மையாக தாக்குவது போலத் தோன்றுகிறது. பல விஷயங்கள் வெளிப்பட எத்தனிக்கின்றன ஆனால் மனிதர்களாகிய நாம் அவைகளுக்கு செவிமடுக்க ஒரு சந்தர்ப்பம் கொடுப்பதில்லை. மன்னர் அசுவபதி இத்தகைய விஷயங்களை ஒரு முணுமுணுப்பாக கேட்கிறார். இத்தகைய நம்மால் கேட்கப்படாத ஒலிகள் நம்முடைய இதயத்தைச் சூழ்ந்து கொள்கின்றன. அவைகள் நம்மிடமிருந்து மறுமொழியை எதிர்பார்க்கின்றன, நம்முள் நுழைய ஏதேனும் ஒரு வழி கிடைக்குமா எனப் பார்க்கின்றன, ஆனால் நாம் அவைகளை மூடிவிட்டோம். அதனால் அது ஒரு முணுமுணுப்பாக, நாம் கேட்கவே முடியாத முணுமுணுப்பாக ஆகிவிடுகிறது. மன்னர் அசுவபதி சூட்சுமமாக கேட்கும் திறன் பெற்றிருப்பதால் இந்த முணுமுணுப்புகளின் ஒலி பெரிதாகிறது, மேலும் பெரிதாகிறது, முடிவில் இம்முணுமுணுப்பு புனிதமான ஒரு பாடலாக மாறிவிடுகிறது. Canticle எனும் சொல்லை இங்கு காணலாம். இச்சொல்லுக்கு தேவாலயங்களில் இறைவனைப் போற்றியும் அவனிடம் கொண்டுள்ள நாட்டத்தையும் பற்றிப் பாடப்படும் பாடல்கள் என்பது பொருள். இப்புனிதப் பாடல் துயருறும் அனைத்தினாலும் இசைக்கப்படுவது. ஏனென்றால் அவைகள் அறியப்படவில்லை, இவையனைத்தும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள விழைகின்றன; அவை பிறக்க முயற்சிக்கின்றன ஆனால் அம்முயற்சி வீணாகிறது, தம்மை வெளிப்படுத்திக் கொள்ளும் வழி அவைகளுக்கு தெரியவில்லை —— அவை இனிமையானவை, அவைகள் நமக்கு அளிப்பதற்காக

பலவிதமானவற்றை தன்னகத்தே கொண்டிருக்கின்றன, ஆனால் யாரும் அதை ருசிக்க முன்வரவில்லை. அதனால் அந்த அழகு இம்மனித உலகில் என்றுமே பிறப்பெடுக்கப் போவதில்லை.

Inaudible to our deaf mortal ears
The wide world-rhythms wove their stupendous chant
To which life strives to fit our rhyme-beats here,
Melting our limits in the illimitable,
Tuning the finite to infinity.

நம்முடைய தூலக் காதுகளால் கேட்கமுடியாத மற்றொரு ஒலியும் இருக்கிறது. அது சூட்சும ஒலி. நம்முடைய தூலக் காதுகளால் இத்தகைய சூட்சும ஒலிகளைக் கேட்க முடியாது; சூட்சும ஒலிகளைக் கேட்கும் திறனற்ற செவிடான காதுகள் இத்தூலக் காதுகள். இவ்வொலியில் அற்புதமான அதிர்வலைகள் இருக்கின்றன, உலகின் சந்தங்கள் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. ஸ்ரீஅரவிந்தர் இதை '*stupendous chant*', என்கிறார் —— ஓர் இசைப்பாட்டு, மிகவும் ஆற்றல் மிக்க பல இனிமையான குரல்களும் அழகான சந்தங்களும் இணைந்து இசைக்கப்படும் அற்புதமான பாடலாக இருக்கிறது என்கிறார். நம்முடைய காதுகளால், செவிடாகிப் போன தூலக் காதுகளால் அதனைக் கேட்க முடியாது. நம்முடைய உடலிலுள்ள காதுகளுக்கு இதைக் கேட்கும் திறன் இல்லை. ஆனால் உயிராற்றல் நம்முடைய இசைவை அந்த மாபெரும் இசைப்பாட்டில் பொருந்தச் செய்வதற்காக முயற்சிக்கிறது. நம்மிடமுள்ள ஏதோ ஒன்று ஏதோ ஒரு விதத்தில் அந்த உலக சந்தத்திற்கு அந்த மாபெரும் ஆற்றல் மிக்க இசைப்பாட்டிற்கு பதிலுரைக்கிறது, உயிர்ப்புத்தன்மை அதனுடன் ஓர் இசைவை, லயத்தை ஏற்படுத்திக் கொள்கிறது. நாம் உலகின் சந்தலயத்துடன் இசைந்து செயல்படும் பொழுது, நம்முடைய குறுகிய ஜீவன் அந்த எல்லையற்றதுடன், நம்முடைய குறுகிய வாழ்வு அந்த பரந்தததுடன் உருகி கலந்து ஒன்றாகிவிடும். உயிராற்றல் எப்பொழுதுமே நம்மை நம்முடைய வரையறையிலிருந்து உயர்ந்து செல்ல வற்புறுத்துகிறது, பரந்த உலகின் சந்தங்களை மென்மேலும் வெளிப்படுத்த நம்மைத் தூண்டுகிறது. இங்கே அசுவபதி மற்றொன்றைக் கேட்கிறார்:

A low muttering rose from the subconscient caves,
The stammer of the primal ignorance;

Answer to that inarticulate questioning,
There stooped with lightning neck and thunder's wings
A radiant hymn to the Inexpressible
And the anthem of the superconscient light.

*இங்கு இரண்டு விஷயங்கள் இருக்கின்றன: ஒன்று - 'a low muttering' – அடிக்குரலில் முணுமுணுப்பது —— முணுமுணுத்தல் என்றாலே ஏதோ பேசுகிறார்கள் என்பது மட்டும் புரியும் ஆனால் என்ன பேசுகிறார்கள் என்பது தெளிவாக நமக்குப் புரியாது. முணுமுணுத்தல் என்றாலே புகார் கூறுதல் என்ற உணர்வுதான் நமக்கு வரும் - தன்னுடைய உணர்வை வெளிப்படுத்த நினைப்பார்கள் ஆனால் அதை சற்று உரத்த குரலில் சொல்வதற்கு தயங்குவார்கள். நம்முடைய அடியுணர்வு தளத்தின் குகையிலிருந்து ஒரு முணுமுணுப்பு மேலே வருகிறது. அதனை 'The stammer of the primal ignorance;' என்கிறார். இரண்டாவது* Stammer —— *திக்குதல்; நம்முடைய பேச்சு சரியாக வெளிவர இயலாத போது திக்குதல் ஏற்படுகிறது. இங்கு அறியாமை எப்படியோ விழித்துக் கொண்டு ஏதோ சொல்ல நினைக்கிறது. ஆனால் அதை தெளிவாக சொல்ல முடியாமல் திக்குகிறது. இத்தகைய செயலுக்கு ஒரு பதில் கிடைக்கிறது, தெளிவான சொற்களால் வெளிப்படுத்த முடியாத ஒரு கேள்விக்கு ஓர் அற்புதமான மறுமொழி கிடைக்கிறது. இத்தெளிவற்ற சொற்கள் முணுமுணுப்பாக நம்முடைய அடியுணர்வின் குகையிலிருந்து கேள்விகளாக வெளிப்படுகின்றன.* Inarticulate *என்றால் ஒரு மனிதன் தான் சொல்ல விரும்புவதை சரியான வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாமல் திணறுவது.*

*இத்தகைய முணுமுணுத்தலுக்கு, அடியுணர்விலிருந்து எழும் தெளிவான வார்த்தைகளால் வெளிப்படுத்தப்படாத வினாவிற்கான விடை அற்புதமான பறவை போன்று கீழே வருகிறது.* Stooped *எனும் வார்த்தையை இங்கு பார்க்கலாம். இச்சொல்லைப் பற்றி ஏற்கனவே பல முறை நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். இச்சொல்லுக்கு மிக வேகமாக கீழே வந்து ஒன்றை கவர்ந்து செல்வது என்பது பொருள். ஆனால் இச்சொல்லின் மற்றொரு அற்புதமான உபயோகத்தை ஸ்ரீஅரவிந்தர் சாவித்ரியில் பல முறை உபயோகத்திருக்கிறார். கழுகு போன்ற சக்தி வாய்ந்த பறவைகள் தன்னுடைய இரையை கவர்ந்து செல்ல மிக உயரத்தில் பறந்து கொண்டே கவனித்து மிக வேகமாக பறந்து வந்து கொத்திச் செல்லும்.*

சிறு எலிகளையோ அல்லது பல்லி போன்ற சிறு விலங்குகளைப் பார்த்துவிட்டாலோ மிக வேகமாக பறந்து வந்து கொத்திச் செல்லும். இதுவே stooping எனப்படுவது. இந்தப் பொருளில்தான் இச்சொல் இங்கு உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த முணுமுணுத்தலுக்கு, இத்தகைய திக்குதலுக்கு, தெளிவற்ற இந்த கேள்விக்கு, பதில் ஒளிமிக்க பாசுரமாக பாய்ந்து வருகிறது. எத்தகைய ஆற்றலாலும், எவ்வளவுதான் தெளிவாக கேட்கக் கூடியதாக இருந்தாலும், எவ்வளவுதான் சொல்லாற்றல் மிக்கதாக இருந்தாலும், நம்முடைய மொழியில் வளமை இருந்தாலும் நம்மால் அந்த உண்மையை, அற்புதமான அந்த மெய்மையை வெளிப்படுத்த இயலாது.

அப்பாசுரம் ஒரு ஆற்றல் மிக்க பறவையைப் போன்று, ஒளிமிக்கதாய் ஒரு மின்னலைப் போன்று திடீரென்று சற்றும் எதிர்பாராமல் கீழிறங்கி வந்தது. அப்பறவையின் கழுத்து மின்னலை ஒத்திருக்கிறது, அதன் இறக்கைகளோ இடிஇடித்தது போன்று இருக்கிறது என்கிறார். வார்த்தைகளால் விவரிக்க இயலாத அந்த ஒன்றிற்கு இசைக்கப்பட்டது ஓர் ஒளிமிக்க பாசுரம் - இதுவே இதற்கான பதிலுரை. மேலும் ஒரு கீதமாகவும் இருக்கிறது என்கிறார். Anthem எனும் சொல்லை இங்கு காணலாம். தேசிய கீதத்தை National Anthem என்று சொல்வோம் அல்லவா? இச்சொல்லும் ஒரு புனிதப் பாடலைக் குறிக்கிறது. நாம் இப்பொழுது தேவாலாயங்களில் பாடப்படும் மூன்று விதமான பாடல்களைப் பற்றி பார்த்திருக்கிறோம்: hymn, canticle மற்றும் anthem. இந்த இசைப்பாடல் உயர் உணர்வின் ஒளி. அதனால் கீழிருந்து, அடியுணர்வின் குகையிலிருந்து முணுமுணுப்பாக ஒரு கேள்வி வருகிறது, மேலிருந்து அதற்கான மறுமொழியும் கிடைக்கிறது. அம்மறுமொழி அற்புதமான ஆற்றல் மிக்கதாக மிக உயர்வான நிலையிலிருந்து ஒரு புனிதமான இசையாக, திருவிசைப்பாசுரமாக வருகிறது.

> All was revealed there none can here express;
> Vision and dream were fables spoken by truth
> Or symbols more veridical than fact,
> Or were truths enforced by supernatural seals.

முதல் வரி எளிமையாக இருப்பதைக் காணலாம்: அந்த சூட்சும உலகில் அனைத்தும் அவர் பார்க்கும்படி வெளிப்படுத்திக்

கொண்டன. அங்கு அனைத்தும் தெளிவாக வெளிப்படையாக இருக்கிறது ஆனால் இங்கு எவராலும் அதை விவரிக்க இயலாது. இதற்கு உதாரணமாக மன்னர் அசுவபதிக்கு அகக்காட்சிகளும் கனவுகளும் வருகின்றன. இந்த அகக்காட்சிகளும் கனவுகளும் வெறும் தோற்றங்களோ, பிரமையோ, மாயையோ அல்லது எண்ணங்களினால் ஏற்படும் காட்சிகளோ அல்ல. ஆனால் உண்மையை உரைக்கும் சிறுகதைகள். Fable என்றால் குட்டிக் கதைகள். விலங்குகளைப் பற்றியோ அல்லது ஏதேனும் ஒன்றைப் பற்றிய குட்டிக் கதை ஆனால் அதில் ஒரு கருத்து பொதிந்திருக்கும். மன்னர் அசுவபதி கண்ட அகக்காட்சிகளும் கனவுகளும் இக்குட்டிக் கதைகளைப் போன்றே ஏதோ ஓர் ஆழ்ந்த பொருளை உணர்த்தின.

அவை *'fables spoken by truth'* ___ அவருக்கு ஆழ்ந்த உண்மைகளை விளக்கும் குட்டிக் கதைகளாக இருக்கின்றன. அல்லது அவை சின்னங்களாக இருக்கின்றன. சில சமயம் நமக்குப் புரியாத கனவுகள் வருவதுண்டு, அவை சம்பந்தமில்லாமல் இருக்கும். மேலும் ஏன் இவைகளை நாம் பார்க்கிறோம் என்பதும் நமக்குத் தெரியாது. ஆனால் இச்சின்னங்கள் ஆழ்ந்த அல்லது மேலான உண்மையை நமக்குத் தெரிவிக்கின்றன. அசுவபதி பார்த்த இச்சின்னங்கள் ஓர் ஆதாரச் செய்தியாக இல்லாமல் உண்மையை உரைப்பதாக இருக்கின்றன. Veridical ___ உண்மையை உரைக்கின்ற. இப்புற உலகில் நடைபெறும் விஷயங்களை நாம் மறுக்க முடியாது. ஆனால் அந்நிகழ்வுகளின் பின்னே ஆழ்ந்த உண்மைகள் இருக்கின்றன. சில சமயங்களில் கனவுகளிலும் காட்சிகளிலும் நாம் பார்க்கும் சின்னங்கள் நேரில் அன்றாடம் நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்ச்சிகளைக் காட்டிலும் மேன்மையான உண்மைகளை, முக்கியத்துவத்தை நமக்குத் தெரிவிக்கின்றன. அல்லது கனவில் நடப்பவைகளே உண்மையாக இருப்பதும் உண்டு. அக்கனவுகள் பூர்த்தியடையக் கூடியவை, ஏனெனில் அவை உயர் இயற்கையால் அமல் செய்யப்பட்ட முத்திரைகள். ஒரு சட்டம் இருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். அதை அமலாக்கம் செய்ய குறிப்பிட்ட சில நபர்கள் இருக்கிறார்கள். அவர்கள்தான் இச்சட்டத்தை அமல் செய்து நடைமுறைக்குக் கொண்டுவர முடியும். இதைத்தான் enforce என்கிறோம். முத்திரைகள், இம்முத்திரைகள் இயற்கையின் முத்திரைகள் அல்ல, உயர் இயற்கையின் முத்திரைகள் கனவில் அல்லது அகக்காட்சியாக

காணப்பட்ட காட்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டனவா என உறுதிப்படுத்திக் கொள்கின்றன.

ஒரு முத்திரை என்பது இந்நாட்களில் நாம் உபயோகிக்கும் ரப்பர் ஸ்டாம்ப்பை நினைவுபடுத்துகிறது. ஆனால் முற்காலத்தில் மன்னர்கள் அழகான முத்திரை மோதிரங்களை அணிந்தார்கள்: ஏதேனும் முக்கியமான ஆணைகளை பிறப்பிக்க வேண்டுமென்றால் அந்த ஆணைக்கு கீழே கையெழுத்திட்டு தங்களுடைய முத்திரையையும் பதிப்பார்கள். இது அரசன் ஆணையைப் பிறப்பித்திருக்கிறான் என்பதையும் அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையும் குறிக்கும். ஆனால் இங்கு கூறப்பட்டிருப்பவை இயற்கையின் முத்திரைகள்; இப்புவி தோன்றிய நாளிலிருந்தே இத்தகைய உண்மைகள் தங்கள் வேலையை செய்துகொண்டிருக்கின்றன. இவ்வுண்மைகள் உயர் இயற்கையின் முத்திரைகள் - உயர் ஆற்றலுள்ள, அதிகாரம் படைத்த உயர் இயற்கையினால் அவை நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

Immortal eyes approached and looked in his,
And beings of many kingdoms neared and spoke:
The ever-living whom we name as dead
Could leave their glory beyond death and birth
To utter the wisdom which exceeds all phrase:

ஆன்மாவின் இத்தகைய தூய்மையான புலனுணர்வின் கொடையால், மன்னர் அசுவபதி ஜடத்தை மறைத்திருக்கும் திரையினைக் கடந்து, ஊடுருவி சூட்சும உலகங்களைப் பார்க்கிறார், இறவாத்தன்மையுடைய ஜீவர்களை அவரால் பார்க்க முடிகிறது. அவர்கள் தங்களுடைய அழகான முகத்துடனும் இறவாத் தன்மை கொண்ட கண்களுடனும் அவர் அருகில் வந்து அவருடைய கண்களைப் பார்க்கின்றனர். பல்வேறு உலகங்களிலிருந்து ஜீவன்கள் அவரருகில் வந்து அவரிடம் பேசுகின்றன. இதற்கடுத்த நூலில், அசுவபதி பல்வேறு உலகங்களில், உணர்வின் பல்வேறு உலகங்களில் பயணிப்பதை நாம் படிக்க இருக்கிறோம். அவ்வுலகங்களில் பல ஜீவன்கள் இருக்கின்றன. அந்த ஜீவன்கள் அவரை அணுகி, அவரருகில் வந்து அவருடன் பேசுகின்றன. அவர்களில் சில ஜீவன்கள் என்றும் வாழ்கின்றன, அவர்கள் தம்முடைய தூல சரீரத்தை விட்டுவிட்டாலும், அவர்கள் இறந்துவிட்டார்கள் என

நாம் நினைத்தாலும் அவர்கள் எப்பொழுதும் வாழ்ந்து கொண்டே இருக்கின்றனர். எத்தகைய உயர் தளத்தில் வாழ்ந்திருந்தாலும் பிறப்பையும் இறப்பையும் கடந்து அனைத்தையும் கடந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் அசுவபதியிடம் வருகின்றனர். அவர் அந்த உயர் ஜீவன்களைத் தேடி அந்த இறவா நிலைக்குச் செல்ல வேண்டியதில்லை அவர்கள் அசுவபதியிடம் வந்து பேசுகிறார்கள், சொற்றொடர்களை விஞ்சி நிற்கின்ற விவேகத்தை, ஞானத்தை அவரிடம் பேசுகிறார்கள். Phrase ___ சொற்றொடர். அவரிடம் அவர்கள் வெளிப்படுத்தியதை வார்த்தைகளால் விவரிக்க இயலாது.

இவ்வரிகள் எனக்கு ஒன்றை நினைவுபடுத்துகின்றன. ஸ்ரீஅரவிந்தர் 1908-1909இல் அலிப்பூர் சிறையில் இருந்த போது ஓர் அற்புதமான நிகழ்ச்சி ஏற்பட்டது. சுவாமி விவேகானந்தர் (அவர் அப்பொழுது இறந்து விட்டிருந்தார்) இரண்டு மூன்று வாரங்களுக்கு தொடர்ந்து ஸ்ரீஅரவிந்தரிடம் வந்து கொண்டிருந்தார். "அவர் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக வந்தார், எனக்கு அது புரியும் வரையில் அவர் வந்து கொண்டிருந்தார்." என்கிறார் ஸ்ரீஅரவிந்தர். இந்த இருப்பின் பல்வேறு நிலைகளைப் பற்றிய தத்துவங்களை புரிய வைக்கவே சுவாமி விவேகானந்தர் வந்தார். அதன் பின் அதிமனத்தைப் பற்றிய விளக்கத்தை ஸ்ரீஅரவிந்தர் தானே கண்டறிந்து கொண்டார். இது ஒரு சிறிய உதாரணம்தான். மேற் சொன்ன வரிகளில் அவர் தன்னுடைய அனுபவத்தைப் பற்றிப் பேசுகிறார் ஆனால் இந்த நிகழ்ச்சியைப் பற்றி ஸ்ரீஅரவிந்தரே சொன்னதால் நம்மால் அறிய முடிகிறது.

The kings of evil and the kings of good,
Appellants at the reason's judgment seat,
Proclaimed the gospel of their opposites,
And all believed themselves spokesmen of God:
The gods of light and titans of the dark
Battled for his soul as for a costly prize.

இத்தகைய சூட்சும உலகோடு நமக்குத் தொடர்பு ஏற்படும் பொழுது, முக்கியமாக நாம் ஓர் உயர்வான நோக்கத்தின் பொருட்டு அதை அடையும் பொழுது, முரணான சக்திகள் நம்மை ஆட்கொள்ள முற்படும். அதனால் பல்வேறு நிலைகளில் உள்ள இந்த ஜீவன்கள், சில சக்திகள் நம்மை உயர்த்த முற்படும் வேறு சில சக்திகளோ நம்மை பிடித்துக் கொண்டு நம்மை கீழே

இழுக்கும். நம்முடைய காரண அறிவு ஒரு நீதிபதியைப் போன்று அமர்ந்திருக்கிறது. இந்த ஜீவன்கள் தங்களுடைய வழக்கை நியாயப்படுத்த முயற்சிக்கின்றன. அதனால் இந்த நீதிபதி எனும் காரண அறிவு, அவைகளுக்கு சாதகமாக தீர்ப்பளிக்கிறது. Appellant என்றால் நீதிபதியிடம் முறையிடுபவர் என்பது பொருள். ஒவ்வொரு ஜீவனும் தங்களுடைய வழக்கை முன் வைக்கிறது: ஒவ்வொன்றும் நல்ல செய்திகளை, தங்களுடைய நிலையிலான புனிதமான உண்மைகளைச் சொல்கின்றன ___ அந்த நிலைகள் ஒன்றுக்கொன்று எதிர்மறையானவை ___ அவை ஒன்றொடன்று முரண்படுகின்றன. எப்படியோ இந்த காரண அறிவு எது சரியானது என அறிய ஒரு வழியைத் தேடுகிறது. அங்கு வருகின்ற ஒவ்வொரு ஜீவனும் 'நான் இறைவனின் பிரதிநிதியாக வந்திருக்கிறேன், நான் இறைவனுடைய பிரதிநிதியாக இங்கு பேச வந்திருக்கிறேன்.' என்கிறது. இந்த ஜீவன்களுக்குப் பின்னே கடவுளர்கள் இருக்கிறார்கள், இருளும் ஒளியுமான பிரபஞ்ச சக்திகள் இருக்கின்றன, அவைகள் மன்னர் அசுவபதியை தங்கள் பக்கம் வைத்துக் கொள்ள விழைகின்றன. அவருடைய ஆன்மா போர்க்களத்தின் நடுவில் இருப்பது போன்று, மாறுபட்ட இச்சக்திகளுக்கு நடுவே இருக்கிறது.

In every hour loosed from the quiver of Time
There rose a song of new discovery,
A bow-twang's hum of young experiment.

இவ்வாறு கடந்து செல்லும் ஒவ்வொரு மணி நேரமும் வில்லிலிருந்து விடுபட்ட அம்பு போல் இருப்பது போன்ற அனுபவம் அவருக்கு ஏற்படுகிறது. காலம் என்பது ஒரு வில்லாளனைப் போன்றது, அது ஒவ்வொரு மணி நேரத்தையும் ஓர் அம்பாக ஒன்றன்பின் ஒன்றாக விடுவிக்கிறது - இதுதான் மன்னர் அசுவபதிக்கு ஏற்பட்ட அந்த அனுபவம். ஒவ்வொரு மணி நேரமும் '*loosed from the quiver of Time*': quiver என்பது அம்பறாத்தூணி, அம்புகளை வைத்துக்கொள்ளும் கூடு. காலம் தன்னுடைய முதுகில் இதை சுமக்கிறது, ஓர் அம்பை வெளியே எடுக்கிறது, வில்லில் பொருத்தி எய்கிறது, பின் அடுத்த அம்பை எடுக்கிறது. Quiver எனும் இச்சொல்லை இதே எழுத்துக்கள் கொண்ட quiver எனும் மற்றொரு சொல்லோடு நாம் குழப்பிக் கொள்ளக் கூடாது. அச்சொல்லின் பொருள் முற்றிலும் வேறானது. அதற்கு சிறு அசைவு என்பது பொருள். காலம் விடுத்த இந்த

*ஒவ்வொரு மணி நேரத்துடனும் ஓர் அற்புதமான ஒலி வருகிறது, 'a song of new discovery', நம்மை கிளர்ச்சியுறச் செய்யும், சிலிர்ப்பூட்டும் ஒலி, அம்பிலிருந்து வில் விடுபடும்பொழுது ஓர் ஒலி எழும் அல்லவா, அது போன்ற ஓர் ஒலியை ஏற்படுத்துகிறது —— வில்லினுடைய நாண்களின் அதிர்வு ஏற்படுத்தும் ஒலி. இதுவே* twang *எனப்படுவது, அம்பு ஏற்படுத்தும் ஒலி. அது ஒரு பாடலைப் போன்று, நம்மை புளகாங்கிதம் அடையச் செய்யும் பாடல், இளமையை பரிட்சிக்கும் பாடல் போன்று இருக்கிறது. ஒவ்வொரு கணமும் மன்னர் அசுவபதி புதுமையான, சிலிர்ப்பூட்டும் அனுபவத்தைப் பெறுகிறார்.*

Each day was a spiritual romance,
As if he was born into a bright new world;
Adventure leaped an unexpected friend,
And danger brought a keen sweet tang of joy;
Each happening was a deep experience.

*'Spiritual romance'* : romance *எனும் இச்சொல் காதலைக் குறிக்க அல்லது ஒரு காதல் கதையைக் குறிக்க தற்காலத்தில் உபயோகப்படுத்தப்படுகிறது. ஆனால் உண்மையில் இச்சொல் பல தீரச்செயல்களை விவரிக்கும் செய்யுளை அல்லது கதையை குறிக்கும். இக்கதைகள் பழங்காலத்தில் மன்னர்களால் படைகளை தலைமையேற்க உயர்த்தப்பட்ட உயர்குடி பெருமக்களைப் பற்றியும் அவ்வழிப் பெண்களைப் பற்றியும், அவர்கள் மக்களால் அறியப்படாத புதிய நாடுகளுக்கு செய்த பயணங்கள், அத்தகைய வீரதீர பயணத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை விளக்கும் கதைகளே* "romance" *எனப்படுவது.* Romance *என்பது நம்மால் முற்றிலும் நம்ப முடியாத ஒரு கற்பனைக் கதை. மன்னர் அசுவபதிக்கு ஒவ்வொரு நாளும் இப்படித்தான் இருக்கிறது. முற்றிலும் சாகசம் நிறைந்ததாக, துணிகரச் செயலாக, அவருக்கு தான் ஓர் ஒளிமிக்க புதிய உலகத்தில், நம்முடைய சாதாரண உலகத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஓர் உலகத்தில் பிறந்தாற் போன்று இருக்கிறது.* Adventure: *ஆபத்தான செயல்கள், எதிர்பாராமல் திடீரென ஏற்படும் நிகழ்ச்சிகள்: இத்தகைய எதிர்பாராத விஷயங்கள் அவருடைய வாழ்வில் "ஓர் எதிர்பாராத நண்பனை" போன்று குறுக்கிட்டன. தீரமானச் செயல் ஆபத்தானதுதான் என்றாலும் அது நமக்கு உதவக்கூடும். அது*

அபாயகரமானதாக இருந்தாலும், அந்த அபாயம் "ஆனந்தத்தின் இனிமை விளிம்பை" நம்மை சுவைக்கச் செய்யும். நாம் சமையல் கலையில் தேர்ந்தவராக இருப்பின் நம்முடைய உணவில் சுவை சேர்க்க சிறிது மிளகாயையோ அல்லது எலுமிச்சை சாறையோ சேர்ப்பதுண்டு அல்லவா. இந்த அபாயம் கூட அப்படித்தான், சுரீரென்ற சுவையை அதே சமயம் இனிப்பான சுவையை, ஆனந்தத்தின் சுவையைக் கொடுக்கிறது என்கிறார். இவ்வாழ்வில் ஒவ்வொரு நிகழ்வும் ஆழ்ந்த அனுபவத்தை நமக்குத் தருகிறது.

There were high encounters, epic colloquies,
And counsels came couched in celestial speech,
And honeyed pleadings breathed from occult lips
To help the heart to yield to rapture's call,
And sweet temptations stole from beauty's realms
And sudden ecstasies from a world of bliss.

இங்கு அசுவபதிக்கு ஏற்பட்ட தீரச்செயல் அனுபவங்களைப் பற்றிய சில உதாரணங்களைப் பார்க்கலாம். *'High encounters'* பல உயர்ந்த ஜீவன்களை அவர் சந்தித்தது பற்றிய மயிர்கூச்செறியும் அனுபவங்கள்; *'epic colloquies'* – colloquy என்பது ஓர் உரையாடல், இரு நபர்களுக்கிடையே நடப்பது, இவ்வுரையாடல் மிக உயர்ந்த நிலையில் இருப்பது: epic என்பது மிக உயர்வான, முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றைக் குறிப்பது; அவருக்கு அறிவுரைகள், ஆலோசனைகள் வருகின்றன. இந்த அறிவுரைகள் சாதாரண வார்த்தைகளால் நிறைந்தவை அல்ல, அவை மேல் உலகத்திலிருந்து வந்தவை. மேலும் அவரை கவரக்கூடிய விஷயங்களும் வருகின்றன. தேனொழுகும் இனிமையான வார்த்தைகள், நம்மை ஆனந்தத்தில் மூழ்கவைக்கும், இதயத்தை ஆனந்தத்தில் திளைக்கச் செய்யும் ஓர் அழைப்பு, அழகான உலகங்களிலிருந்து நம்மைத் தூண்டும், தடுமாற வைக்கும் அழைப்பு மெதுவாக நுழைகிறது. Stole எனும் சொல்லை நாம் முன்பே பார்த்திருக்கிறோம். இச்சொல்லுக்கு திருடுதல் என்பது பொருளல்ல, ஆனால் சத்தமின்றி நுழைதல் என்பது பொருள். நம்முடைய ஆசையைத் தூண்டும் இத்தகைய வார்த்தைகள் ஓசையின்றி நம்முள் நுழைகின்றன. இத்தூண்டுதல்கள் அழகு கோலோச்சும் நிலையிலிருந்து வருகின்றன, ஆனந்த உலகிலிருந்து திடீரென்று பாயும் பரவசமாக அவை இருக்கின்றன.

It was a region of wonder and delight.
All now his bright clairaudience could receive;
A contact thrilled of mighty unknown things.

*மன்னர் அசுவபதி இப்பொழுது சஞ்சாரம் செய்யும் இந்த சூட்சும உலகம் "அற்புதமும் ஆனந்தமும் உள்ள பகுதி". நமக்கு* 'clairvoyance' *எனும் சொல் சற்று அறிமுகமான ஒன்று - இதற்கு சூட்சும சாம்ராஜ்யத்தை பார்க்கும் திறன் பெற்றவர்கள் என்பது பொருள். ஆனால் இங்கு* clairaudience *என சொல்லப்பட்டிருக்கிறது. இச்சொல்லுக்கு தெளிவாகக் கேட்டல் என்பது பொருள். ஆன்மாவின் பரிசாக அவர் பெற்ற தூய்மையான புலனுணர்வு சூட்சுமமாக கேட்கும் திறனை அவருக்கு அளித்தது. அதனால் அவர் பலவிதமான விஷயங்களை சூட்சுமமாக கேட்கும் திறன் பெற்றார். இத்தகைய திறனால் மன்னர் அசுவபதிக்கு சிலிர்ப்பூட்டும் பல அற்புதமான ஆற்றல் மிக்க புதிய விஷயங்களோடு தொடர்பு ஏற்படுகிறது. அடுத்த வரிகளில் மற்ற புலன்களைப் பற்றிக் கூறுகிறார்.*

Awakened to new unearthly closenesses,
The touch replied to subtle infinities,
And with a silver cry of opening gates
Sight's lightnings leaped into the invisible.

*அடுத்து அவருடைய தொடு உணர்வு, அது புதிய சூட்சும உணர்வாக விழித்துக் கொள்கிறது —— அவை நமக்கு மிகவும் அருகிலிருப்பவை ஆனால் இவ்வுலகைச் சாராதவை அதனால் சூட்சுமமான அனந்த பொருளுக்கு தன்னைத் திறக்கிறது, பதிலிறுக்கிறது. அடுத்த இரு வரிகளும் 'And with a silver cry of opening gates / Sight's lightnings leaped into the invisible' சாவித்ரியின் மிக அற்புதமான வரிகள்.* Silver *என்பது ஒரு நிறம், ஆனால் அதே சமயம் ஓர் உலோகத்தின் பெயரும் ஆகும். இந்த சூட்சும உணர்வின் கதவுகள் வெள்ளியால் ஆனவை என நம்மை எண்ண வைக்கிறது, அதனால் அக்கதவைத் திறக்கும் பொழுது அதன் ஓசை அருமையான இசைக் கருவியின் ஓசை போல் இருக்கிறது. இதைத்தான் 'a silver cry of opening gates' என்கிறார் ஸ்ரீஅரவிந்தர். இக்கதவுகள் அகக்காட்சிகளைப் பார்க்கும் ஆற்றலை அளிக்கின்றன, கண்களால் பார்க்க முடியாதவைகளை திடீரென்று அசுவபதி பார்க்கிறார், பல புதிய உலகங்களை இதற்கு முன் அவர் கண்டிராத பல உலகங்கள் அவர் கண்முன் விரிகின்றன.*

*(விளக்கம் தொடரும்)*

# சாவித்ரிபவன் செய்திகள்

*ஜனவரி —— ஜூன் 2014*

**சாவித்ரி பவனின் வாராந்திர வகுப்புகள்:**

*ஞாயிறுகாலை 10.30-12.00 மணி வரை சாவித்ரி குழு கற்றல்*

| | |
|---|---|
| *திங்கள்* | *மாலை 3-4 மணி வரை டாக்டர் ஜெய் சிங் அவர்களின் "யோகமும் மனிதனின் பரிணாம வளர்ச்சியும்"* |
| | *மாலை 5-6 மணி வரை திரு.ஆனந்த ரெட்டி அவர்களின் "சாவித்ரியில் பூரண யோகம்"* |
| *செவ்வாய்* | *காலை 9-10.30 மணி வரை பெட்ரீஷியாவின் "சாவித்ரியின் ஓசைகள்" —— உச்சரிப்பை பயிற்றுவித்தல்* |
| | *மாலை 3-4 மணிவரை டாக்டர் ஜெய் சிங் அவர்களின் "யோகமும் மனிதனின் பரிணாம வளர்ச்சியும்"* |
| | *மாலை 4-5 மணி வரை அன்னையின் அஜெண்டாவிலிருந்து அன்னையின் ஒலிப்பதிவு செய்யப்பட்ட பேச்சினை கங்காலட்சுமியுடன் கேட்கலாம்.* |
| | *மாலை 5-6 மணி வரை சுதர்சன் நடத்தும் சாவித்ரி தமிழ் வகுப்பு* |
| | *மாலை 5.45-7.15 மணி வரை ஓம் மந்திரத்தை குழுவினர் இசைக்கக் கேட்கலாம்.* |
| *புதன்* | *காலை 9-12.30 வரை ஆஷிஷ் ஜோஷியின் பூரண யோகப் பயிற்சிப் பட்டறை* |
| | *மாலை 5-6 வரை ஆனந்தி வழங்கும் "முத்ரா-சி" வகுப்பு* |
| | *மாலை 5.30-6.30 மணி வரை ஷர்த்தாவன் நடத்தும்* "Reading the Life Divine" |
| *வியாழன்* | *மாலை 4-5 மணி வரை ஷ்ரத்தாவனின் சாவித்ரி ஆங்கில வகுப்பு.* |
| *வெள்ளி* | *காலை 9-12.30 வரை ஆஷிஷ் ஜோஷியின் பூரண யோகப் பயிற்சிப் பட்டறை* |

*மாலை 3-4 மணி வரை டாக்டர் ஜெய் சிங் அவர்களின் "யோகமும் மனிதனின் பரிணாம வளர்ச்சியும்"*
*மாலை 4-5 மணி வரை அன்னையின் அஜெண்டாவிலிருந்து அன்னையின் ஒலிப்பதிவு செய்யப்பட்ட பேச்சினை கங்காலட்சுமியுடன் கேட்கலாம்.*

*சனி* — *மாலை 4-5 மணி வரை அன்னையின் அஜெண்டாவிலிருந்து அன்னையின் ஒலிப்பதிவு செய்யப்பட்ட பேச்சினை கங்காலட்சுமியுடன் கேட்கலாம்.*

*ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று ஸ்ரீஅரவிந்தரின் சிலை முன்பு சாவித்ரி வாசித்தலும் தியானமும் நடைபெறும்.*

***ஜனவரி 2014:***

*1-31* கண்காட்சி: **சாவித்ரியில் தியானம் - நூல் ஒன்று :** *அன்னையின் வழிகாட்டுதலால் ஹூதா அவர்கள் வரைந்த 104 ஓவியங்கள் இடம் பெற்றன.*

*4* ***'ஸ்ரீஅரவிந்தரின் சாவித்ரியில் பாரம்பரிய புராணங்கள்'*** *- ஸ்ரீஅரவிந்தரின் சாவித்ரியில் இடம் பெற்றுள்ள கிரேக்க கதைகளின் பின்னனி பற்றி பாலா மர்பி அவர்கள் கதைத் தொடராக வழங்கினார்.*

*6* *ப்ரையன் தாமஸ் மற்றும் மேரி எவ்லின் டக்கர் எழுதிய* ***பிரபஞ்சத்தின் பயணம்*** *எனும் திரைப்படம் இடம் பெற்றது. அண்டத்திலும் புவியிலும் மற்றும் மனிதனில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைப் பற்றியும் விவரிக்கிறது இத்திரைப்படம்.*

*11* *The Eternity Game - யோகம் விளையாட்டைப் போன்றதே, ப்ரான்ஸ் அவர்களின் அறிமுகம் இடம் பெற்றது.*

*13* *ஜார்ஜ் வன் ரக்கம் அவர்களின் Preparing for the Miraculous உரையின் வீடியோ திரையிடப்பட்டது.*

*20* *மலர்களின் போதனைகள் - ஸ்ரீஅரவிந்த ஆசிரம அன்னையின் வாழ்வும் பணிகளும் எனும் திரைப்படம் இடம் பெற்றது. இத்திரைப்படத்தை ஆரோவில்வாசி லோரெட்டா அவர்கள் தயாரித்திருந்தார்.*

*22-26* *ஜே.வி.அவதானுலு அவர்களின் பிராணாயாம வகுப்புகள் நடைபெற்றன.*

27 **சாவித்ரியில் தியானம் - நூல் நான்கு: பிறப்பும் தேடலும்** ஹூதாவின் ஓவியங்கள் இடம் பெற்றுள்ள இத்திரைப்படத்தில் அன்னை அவர்கள் சாவித்ரி பத்திகளை வாசிக்க அவரின் ஆர்கன் இசையுடன் மனோகர் எனும் ஆரோவில்வாசியால் தயாரிக்கப்பட்டது இத்திரைப்படம்.

31 **இறப்பும் மீட்சியும்** - பாலா மர்பி அவர்களின் கதை கூறும் தொடரின் மற்றொரு வகுப்பு.

**பிப்ரவரி:**



அன்னையின் பிறந்த தினத்தையொட்டி சாவித்ரி தமிழ் வகுப்பு மாணவர்கள்வழங்கிய'குருஸ்தோத்திரமும்சாவித்ரிவாசித்தலும்'நிகழ்ச்சி.

1-28 **அன்னை ஒரு கண்ணோட்டம்** - அன்னை மார்ச் 29 1914 அன்று முதன்முதலாக பாண்டிச்சேரி வந்து ஸ்ரீஅரவிந்தரை தரிசித்து நூறு ஆண்டுகள் ஆனதை கொண்டாடும் விதமாக ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சி.

3 **மாத்ரிமந்திரை நிர்மாணித்தல் :** அன்பின் அயரா உழைப்பு 1971 —— 2008 திரைப்படம் இடம் பெற்றது.

10 **அன்னையின் நான்கு அம்சங்கள்** - ஸ்ரீஅரவிந்த ஆசிரமம் தயாரித்த திரைப்படம் இடம் பெற்றது.

17 ஸ்ரீஅரவிந்த ஆசிரம ஆவணக் காப்பகம் 2010 ஆம் ஆண்டு தயாரித்த The One Whom we Adore as The Mother அன்னையின் வாழ்வை விளக்கும் திரைப்படம் இடம் பெற்றது.

21 அன்னையின் நாற்காலி, தியானத்திற்காக நாள் முழுவதும் ஹாலில் வைக்கப்பட்டிருந்தது.

22 சாவித்ரி தமிழ் வகுப்பு மாணவர்கள் வழங்கிய **குரு-ஸ்தோத்திரமும் சாவித்ரி வரிகளை வாசித்தலும்** நிகழ்ச்சி இடம் பெற்றது.

24 **அன்னையின் பால்கனி தரிசனம் 1965-1973** திரைப்படம் இடம் பெற்றது —— அன்னையே தெரிவு செய்த அவருடைய 106 புகைப்படங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது இத்திரைப்படம். புகைப்படங்களை எடுத்தவர் சுதா சுந்தரம். சாவித்ரி பவனில் தாத்தியானா எனும் ஆரோவில் வாசியால் தயாரிக்கப்பட்டது இத்திரைப்படம்.

28 **ஹூதா என்பவர் யார்? ——** ஆரோவில்வாசி மல்லிகா நிகழ்த்திய ஆங்கில உரையை ரஷ்ய மொழியில் வழங்கியவர் ரோசா

**மார்ச்:**

1-31 **அன்னை ஒரு கண்ணோட்டம்** - அன்னை மார்ச் 29 1914 அன்று முதன்முதலாக பாண்டிச்சேரி வந்து ஸ்ரீஅரவிந்தரை தரிசித்து நூறு ஆண்டுகள் ஆனதை கொண்டாடும் விதமாக ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சி.

3 **ஸ்ரீஅரவிந்தரின் அன்னை புத்தகத்தை அன்னை வாசித்தல் - பகுதி ஒன்று** —— திரைப்படம் இடம் பெற்றது.

7 The Eternity Game - யோகம் விளையாட்டைப் போன்றதே, ப்ரான்ஸ் அவர்களின் அறிமுகம் இடம் பெற்றது.

8 **ஹெர்குலிஸீம் சென்டாரும்** - பாலா மர்பி அவர்களின் மூன்றாவது கதைத் தொடர்.

10 **ஸ்ரீஅரவிந்தரின் அன்னை புத்தகத்தை அன்னை வாசித்தல் - பகுதி இரண்டு** —— திரைப்படம் இடம் பெற்றது.

14 லாடிஸ்லாவ் ப்ராஸ்மன் அவர்களின் தனி வயலின் இசை நிகழ்ச்சி நடை பெற்றது.

15 லாடிஸ்லாவ் மற்றும் புஷ்கர் பங்கேற்ற மேற்கத்திய இசை பற்றிய ஆய்வரங்கு நடைபெற்றது.

17 இரண்டு திரைப்படங்கள் இடம் பெற்றன : **அன்னையின் வாழ்வு - ஒரு கண்ணோட்டம்** மற்றும் **தெய்வீக அன்னையை வழிபடுதல்**

22 லாடிஸ்லாவ் மற்றும் புஷ்கர் பங்கேற்ற மேற்கத்திய இசை பற்றிய ஆய்வரங்கு நடைபெற்றது.

24 **இறை வாழ்வின் பயணம் - பகுதி ஒன்று** திரைப்படம் இடம் பெற்றது.

29 **விதிக்கப்பட்ட சந்திப்பு** : சாவித்ரியின் நூல் ஐந்தான அன்பின் நூலை அடிப்படையாகக் கொண்டு துருபத் எனும் ஆரோவில்வாசி வாய் பேசாது அபிநயம் காட்டி (mime) வழங்கிய நிகழ்ச்சி.

அன்னையின் நாற்காலி, கூடத்தில் தியானத்திற்காக வைக்கப்பட்டிருந்தது.



அன்னை பாண்டிச்சேரி வந்து ஸ்ரீஅரவிந்தரை முதன் முதலில் தரிசித்து நூறு ஆண்டுகள் ஆனதைக் கொண்டாடும் விதமாக துருபத் வழங்கிய 'விதிக்கப்பட்ட சந்திப்பு' mime நிகழ்ச்சி.

29 இரண்டு சிறப்புத் திரைப்படங்கள் திரையிடப்பட்டன: **ஒரு புதிய ஜனனம்** மற்றும் தெய்வீக அன்னையை வழிபடுதல்

30 **எங்களுடைய நன்றியறிதல்:** அன்னை பாண்டிச்சேரி வந்து நூறு ஆண்டுகள் ஆனதையொட்டி ஸ்ரீஅரவிந்த ஆசிரமத்தின் சாதகரான ஷோபா மித்ராவினுடைய குழுவினர் பண்ணிசைத்தனர். இந்நிகழ்ச்சி சாவித்ரி பவன் ஆம்பி தியேட்டரில் நடைபெற்றது.

**ஏப்ரல்:**

7 **அன்பின் பயணம்** - டாக்டர் அலோக் பாண்டே அவர்கள் சாவித்ரி பவனில் நிகழ்த்திய உரையின் வீடியோ திரையிடப்பட்டது.

14 **ஸ்ரீஅரவிந்தரின் உத்தரபாரா பேருரை** - ஸ்ரீஅரவிந்தரின் இரண்டாவது முக்கியமான ஆன்மிக அனுபவத்தைப் பற்றி ஷ்ரத்தாவன் ஆற்றிய உரையின் வீடியோ இடம் பெற்றது.

21 **தெய்வீக வாழ்வின் பயணம் - பகுதி இரண்டு** - ஸ்ரீஅரவிந்தர் அன்னையின் வாழ்வைப் பற்றியும் அவர் தம் பணிகளைப் பற்றியும் விளக்கும் திரைப்படம். இத்திரைப்படம் 1926 முதல் இன்று வரை ஸ்ரீஅரவிந்த ஆசிரமத்தின் பணிகளைப் பற்றி விவரிக்கிறது.

28 **சாவித்ரியில் தியானம் - நூல் ஐந்து: அன்பின் நூல் - காதை 1 ___ 3 :** சாவித்ரி பத்திகளை அன்னை வாசிக்க அவருடைய ஆர்கன் இசையுடன் ஹூதாவின் ஓவியங்களைக் கொண்டு மனோகரால் தயாரிக்கப்பட்டது இத்திரைப்படம்.

**மே:**

1-31 **சாவித்ரியில் தியானம் - நூல் ஒன்று: ஆதி காண்டம் -** ஹூதா வரைந்த ஓவியங்கள் கலைக் கண்காட்சி கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

**ஜூன்:**

30 **சாவித்ரியில் தியானம் - நூல் ஆறு: விதியின் நூல் காதை 1-2 :** அன்னையின் வழிகாட்டுதலினால் ஹூதா வரைந்த ஓவியங்களைக் கொண்டு ஆரோவில்வாசி மனோகரால் தயாரிக்கப்பட்ட திரைப்படம் திரையிடப்பட்டது. சாவித்ரி பத்திகளை அன்னை வாசிக்க அவரின் ஆர்கன் இசைப் பின்னனியுடன் தயாரிக்கப்பட்டது.



*மும்பை பள்ளி மாணவர்களுக்கு ஓம் உச்சாடனத்தைக் கற்றுத் தருகிறார் நாரத்*

## சாவித்ரி பவன் எனும் கனவு

ஆரோவிலில் ஒரு சூழலைப் பற்றிய எங்கள் கனவு அது

சாவித்ரியே அதன் மூச்சு

உலகின் அனைத்து பாகங்களிலிருந்து வரும் சாவித்ரி அன்பர்களை அது வரவேற்கும்

சாவித்ரி ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் மையமாக அது விளங்கும்

ஸ்ரீஅரவிந்தரின் சத்தியப் பெருவெளிப்பாடான சாவித்ரி எனும் மகாகாவியத்தை அனுபவிக்க, புரிந்து கொள்ளத் தேவையான அனைத்து நூல் குறிப்புகளையும் செயல்பாடுகளையும் தன்னகத்தே கொண்டிருக்கும்

சூரியனிடமிருந்து வெளிப்பட்ட உண்மை எனப்படும் சாவித்ரி பரிமளிக்கும் பவனமாக விளங்கும்.

## சாவித்ரி பவன் பணிகளுக்கு எவ்வாறு உதவலாம்

சாவித்ரி பவன் நன்கொடைகளையும் நல்லெண்ணம் கொண்டோரின் பொருளுதவியையுமே சார்ந்திருக்கிறது. சாவித்ரி பவன் கனவு நனவாக தாங்கள் கீழ் கண்ட ஏதேனும் ஒரு முறையில் தங்களுடைய நன்கொடைகளை அனுப்பலாம்.

**கிரெடிட் கார்டு / டெபிட் கார்டு** மூலம் நன்கொடைகளைச் செலுத்த விரும்புவர்கள் www.auroville.com/donations எனும் இணையதளம் மூலம் தாங்கள் விரும்பும் நன்கொடைகளை அனுப்பலாம். ரூ.500லிருந்து ரூ.10,000 வரை இதன் மூலம் அனுப்ப முடியும். பெறுபவர் (recipient) எனும் இடத்தில் Savitri Bhavan எனக் குறிப்பிடவும்.

**காசோலைகள் அல்லது வரைவோலைகள்**

காசோலைகள் மற்றும் வரைவோலைகள் Auroville Unity Fund (SAIIER) எனும் பெயருக்கு எடுக்கப்பட்டு கீழ்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

**நீங்கள் இந்தியாவில் வசிப்பவராக இருந்தால்**

- உங்கள் காணிக்கைகளை இணையதள வங்கி வசதிகள் மூலமாகவோ அல்லது நேரிடையாகவோ செலுத்த விரும்பினால் **(Direct transfer) State Bank of India: Branch Code No.03160: Current account no. 10237876031; வருமான வரிச் சட்டம் செக்ஷன் 35(i)(iii) கீழ் 100% வரி விலக்கு பெற விரும்புவோர் Current account no. 31612623238**ஐ உபயோகப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் நன்கொடைகளை இவ்வாறு அனுப்பும்பொழுது அதை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம். பின் இதனை வங்கியில் சரிபார்த்து உடனடியாக அதற்கான இரசீதை எங்களால் அனுப்ப முடியும்.

- ரூ.500 அல்லது அதற்குக் குறைவாகவோ அனுப்பினால் அதை M.O. அல்லது D.D. மூலம் அனுப்ப வேண்டுகிறோம். வெளியிடங்களிலிருந்து காசோலைகள் மூலம் அனுப்பினால் அதைப் பெறுவதற்கு அதிக அளவு செலவாகிறது. மாதந்தோறும் சிறு நன்கொடை அனுப்புபவர்கள் மூன்று மாதத்திற்கொருமுறை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

எல்லாத் தொடர்புகளுக்கும்

**சாவித்ரி பவன்**

**ஆரோவில் - 605101, தமிழ்நாடு**

**தொலை பேசி: 0091(0)413-2622922**

**மின்னஞ்சல்: savitribhavan@auroville.org.in**

**இணையதள முகவரி: www.savitribhavan.org**

சாவித்ரி பவன் SAIIER செயற்திட்டத்தின் கீழ் இயங்குகிறது.
(ஸ்ரீ அரபிந்தோ பன்னாட்டுக் கல்வி ஆராய்ச்சி மையம்)

“சாவித்ரி
உலகின்
திருஉருமாற்றத்திற்கான
மந்திரம்”

அன்னை